விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 22 திங்கட்கிழமை (07.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 231

## பதவி நீக்கப்பட்டார் அயூப் அஸ்மின்



24

## திருடர்கள் நீக்கப்படுவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் திருட ர்கள் இருப்பது விசாரணைகளில் உறுதியானால் அவர்களை கட்சி யில் இருந்து நீக்க நடவ 23

## பேருந்தில் ஹற்றன் சென்ற பிரதமர் ரணில்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயணிகள் பேருந்து ஒன் 24

# புதிய அரசியல் அமைப்பில்

# அநீதியாக எதையும் கேட்காது

# பெற வேண்டியதை பெறுவோம்

## இரா.சம்பந்தன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்) அரசியல் அமைப்பில் நாங்கள் அநீதியாக எதையும் கேட்க கூடாது என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நீதி மற்றும் உரிமை அடிப்படையில் பெற வேண்டியவற்றை பெற வேண்டும். அதற்கு அனைவரும் உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.(24-ம் பக்.)

## எமது விடுதலை வீரர்களை தவறாக குறிப்பிட்டேனா?

### முதலமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நான் அண்மைக் காலங்களில் ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள் குற்றம் இழைப்பது சம்பந்தமாக விடுதலைப்புலிகள் என்ற சொல்லே என்னால் பாவிக்கப்படவில்லை என தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எமது விடுதலை வீரர்களை நான் தவறாக குறிப்பிட்டதாக சிரேஷ்ட அரசியல்வாதிகள் கூட தமது கருத்துக்களை பிழையாக வெளியிட்டமை கவலைக்குரியது எனவும் வருத்தம் தெரிவித்துள்ளார்.

CWN II Plus - இங்கிலாந்து ஏற்பாட்டில் பாடசாலைகளு 23

## யாழ்.பல்கலையை கண்காணிக்க வேண்டும் - இராணுவ தளபதி

வடக்கில் நிகழும் அசம்பாவித சம்பவங்கள் இன்னும் அடிப்படைவாதமாக உருவாகவில்லை. ஆனால் மீண்டும் ஒரு குழப்பத்திற்கு இது வாய்ப்பாக அமையும் என்ற அச்சம் உள்ளதாக தெரிவித்த இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, யாழ். பல்கலைக்கழகத்தை கண்காணிக்க வேண்டிய தேவை உள்ளது என்றும் கண்டி மகாநாயக்க தேரர்களை சந்தித்தபோது தெரிவித்துள்ளார். (மு)

## அல்வாய் வடக்கில் நேற்று சுற்றிவளைப்பு; 18 பேர் கைது

(கரணவாய்)

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியை உள்ளடக்கிய பகுதியினை பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து சுற்றிவளைப்பு தேடுதலினை நேற்று மாலையில் இருந்து இரவு வரை மேற்கொண்டனர்.

பொலிஸாருடன் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மாலை 4 மணியளவில் இருந்து கடும் சோதனை நடவடிக்கை 23

## 20-வது திருத்தச் சட்டம் ஜனநாயகத்துக்கு ஆபத்து

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்றிக் கொள்ள உத்தேசித்துள்ள அரசியலமைப்பின் 20-வது திருத்தச் சட்டமூலம் ஜனநாயகத்துக்கும் நாட்டுக்கும் பெரும் ஆபத்து என்று கபே அமைப்பு எச்சரித்துள்ளது.

தேர்தல் கண்காணிப் 23

## அரசியல் தீர்வு கிடைத்தாலே தேசிய நல்லிணக்கம் சாத்தியமாகும்

### பிரித்தானிய பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியல் தீர்வு கிடைத்தால் மட்டுமே தேசிய நல்லிணக்கம் சாத்தியமாகும் 24

## நான் நல்லாட்சிக்கு வந்தது கள்வர்களை பாதுகாக்க அல்ல!

### சஜித் பிரேமதாஸ காட்டம்



(கொழும்பு)

ஊழலுக்கு ஆதரவாக கைதூக்க முடியாது. ஊழல் மோசடி குற்றசாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் தாமே பதவி விலக 23

## பிரிட்டன் நாடாளுமன்ற குழு யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டன் நாடாளுமன்ற குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் ஏற்பாட்டில் வந்துள்ள பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட செயலர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையிலான யாழ் மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர்கள் மற்றும் யாழ் மாவட்ட செயலகத்தின் அரச அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பாக தமது அனுபவ பகிர்வை வெளிப்படுத்தியதோடு மேலும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை மாவட்ட அடிப்படையில் பயிற்சியளித்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு அதற்கான விண்ணப்பங்களை தற்போது கோரியுள்ளதுடன், விண்ணப்ப முடிவுத்திகதி செப்ரெம்பர் 8ஆம் திகதியென குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசதுறையில் அல்லது தனியார் துறையில் இதுவரை ஏதேனும் சேவையில் (தொழில்) இணைந்திராத பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

21- 35 வரை வயதுள்ள ஆண், பெண் இருபாலாரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியா 24

## ஆட்டம் கண்டது பங்குச்சந்தை!

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் பிணை முறி விவகாரம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் கடந்த ஏழு நாட்களாக பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதி பாரிய வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பங்குதாரர்கள் 56.47 பில்லியன் ரூபாய் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசைக் கவிழ்க்கப் போவதாக கூறுபவர்கள் சிறையில் இருப்பார்கள்

## 2025 வரை ஆட்சியில் இருப்போம் என்றார் ராஜித



(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதாக கூறுபவர்கள் இதனை நிறைவேற்ற வெளியில் இருக்க வேண்டும் எனவும், 2020ஆம் ஆண்டுக்கு பின்னரும் 2025ஆம் ஆண்டு வரை தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்க்க போவதாக கூறுபவர்கள் அப்போது சிறையில் இருப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று வரையறுக்கப்பட்ட அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் கிளையை திறந்து வைத்து உரையாற்றும் போதே இதனை கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எமது அரசாங்கத்தில் இருப்பவர்கள் பிற்காலத்து புத்தர்கள். செய்யும் வேலைகளை வெளியில் சொல்ல தெரிவதில்லை.

புதன்கிழமை நடக்கும் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அரசாங்கத்தை பாதுகாத்துக் கொண்டு ஊடகங்களிடம் அனைத்தையும் வெளியிடுகிறேன்.

நாங்கள் இருக்கும் வரை நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க எவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்காது. அரசாங்கம் ஆரம்பித்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

2020ஆம் ஆண்டுக்கு பிறகும் இந்த அரசாங்கம் தொடரும். புதிய அரசாங்கத்தை உருவாக்குவதா? இல்லையா? என்பதை 2025ஆம் ஆண்டிலேயே நாங்கள் தீர்மானிப்போம்.

இதனால், எவராலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (மு)

# வவுனியாவில் விபத்து மூவர் வைத்தியசாலையில்

(வவுனியா)

வவுனியா-பட்டாணிச்சூர் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றைய தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து நெளுக்குளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் வேப்பங்குளத்திலிருந்து வவுனியா நகருக்கு சென்ற மோட்டார் சைக்கிளும் பட்டாணிச்சூர் முதலாம் ஒழுங்கைக்கு அருகே எதிர் எதிரே மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் இரு மோட்டார் சைக்கிளில பயணித்த மூவரும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலை விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு)

# கிளிநொச்சியில் வாள்வெட்டு மூவர் வைத்தியசாலையில்

(கிளிநொச்சி)

நேற்று பிற்பகல் 02.30 மணியளவில் கிளிநொச்சி இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் யாழ் பருத்தித்துறை பிரதேசத்தை சேர்ந்த மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நோயாளர் காவுவண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்

குறித்த சம்பவத்தில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானவர்கள் யாழ்.பருத்தித்துறை பிரதேசத்தை 35,25,19 ஆகிய வயதை உடைய ஆண்களே என தெரியவருகின்றது.

இதில் 25 வயதான இளைஞனே மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவ் வாள்வெட்டு சம்பவம் ஆனது குடும்பத் தகராற்றினால் இடம்பெற்றுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் மேலதிக விசாரணைகளை பளைப் பொலிசார் மேற்கொண்டு வருவதாகவும் குறித்த பிரதேசத்தின் நிலைமை தற்பொழுது சுமுகமாகவும் இருப்பதாக அங்கிருக்கும் எமது பிராந்திய செய்தியாளர் தெரிவிக்கின்றார். (மு-312)

# வட்டுக்கோட்டை படுகொலை விசாரணையை இளஞ்செழியன் நடத்தக்கூடாது

## மேன்முறையீட்டு நீதிமன்றம்

(கொழும்பு)

வட்டுக்கோட்டை கொலை வழக்கு விசாரணையை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் விசாரணை செய்யக்கூடாதென மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளனர்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்பில் நம்பிக்கையில்லையென மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீடு செய்திருந்தார். இதற்கமையவே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2014 மார்ச் 15ம் திகதி வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் யாழ்ப்பாண கல்லூரிக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடந்த துடுப்பாட்ட போட்டியில் கைகலப்பு இடம்பெற்றது. இதன்போது அமலன் என்பவர் அடித்து கொல்லப்பட்டிருந்தார்.

இதில் தொடர்புடையவர்கள் என 6 பேருக்கு எதிராக யாழ்.மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதில் ஒரு சந்தேக நபரிற்கு எதிராக எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார். இந்த வழக்கு விசாரணை யொன்றின் பின், நீதிபதி இளஞ்செழியன் வழக்கு பற்றி கருத்து கூறி னார் என சந்தேக நபரால் சுமந்திரனி டம கூறப் பட்டது. இதையடுத்து, இந்த வழக்கை விசாரிக்கும் தகுதி இளஞ்செழியனிற்கு இல்லையென்றும், வேறொரு மேல்நீதி மன்றத்தில் வழக்கை விசாரிக்க வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் ஏற்றுக் கொண்டது. இந்த மனு தொடர்பான பதில் அறிக்கையை சட்டமா அதிபர் எதிர்வரும் ஒக்ரோபர் 20ஆம் திகதிக்குள் மன்றுக்கு சமர்ப்பிகக வேண்டும், அது வரை கொலை வழக்கு விசாரணையை யாழ்.மேல்நீதிமன்றில் நடத்த இடைக் கால தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகிறது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது. (மு)


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திகா பிருந்தாவனம்
நல்லூர், யாழ்ப்பாணம்

ஸ்ரீஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் 346 ஆவது பிருந்தாவன பிரவேச ஆராதனை-2017

இன்று 07.08.2017ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 தொடக்கம் நிகழ்வுகள் 10.08.2017 வரை இடம்பெறும்.

மெய்யடியார்களே!

நிகழும் தமிழ் ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 22ஆம் நாள் (07.08.2017) திருவோண நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் பூரணை திதியும் கூடிய சுப நாள் சுப நேரம் திங்கட்கிழமை காலை 09.15 மணிக்கு கொடியேற்றப்பட்டு ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் திருக்கதவு திறக்கப்பட்டு அபிஷேக அர்ச்சனை ஆராதனைகளுடன் இடம்பெறும். மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவன் தாள் வணங்கி சர்வசித்திகளும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

- 07.08.2017-மாலை 03.30 மணியளவில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் இடம்பெறும்.
- 08.08.2017-காலை 09.00 மணியளவில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளுக்கு அபிஷேக ஆராதனை இடம்பெறும். மாலை 03.30 மணியளவில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம்
- 09.08.2017-காலை (துதியை திதி 08.03 மணிக்கு அபிஷேக ஆராதனை. தொடர்ந்து ஸ்வாமிகள் அம்பிகையை வலம் வந்து ஊஞ்சலில் அமர்ந்து தரிசனம் கொடுத்து 'இந்துயனகே கோவிந்த நின்ன பாதார விந்துவ தோரோ முகுந்தா ' என்ற பாடல் பாடிக் கொண்டிருக்கும் பொழுது குருராஜர் பிருந்தா வன பிரவேசம் செய்ய திருக்கதவு சாத்தப்படும். பூஜைகள் மாங்கள ஆராத்தியுடன் முடிவடையும். அதன் பின் மகேஸ்வர பூஜை இடம்பெறும். அடியார்களே! குருராஜரின் அருள் ஆசி பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.
- 10.08.2017- காலை 09.00 மணியளவில் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்வாமிக்கு அபிஷேக ஆராதனை இடம்பெறும்.

தர்மகர்த்தா
திருமதி சசிதேவி குடும்பம்
குரு சேவையில் இருக்கும் அடியார்கள்

363, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



அகவை எண்பது 07.08.2017

அமுத பயணத்தை மனம் உவந்து வாழ்த்துகிறோம்

வே.வ.கோபாலசிங்கம்
கோ. சந்திரவதி

கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சன சமூக நிலைய வாழ்நாள் போசகரும் சமூக சீர்திருத்த சிந்தனையாளருமான வே.வ.கோபாலசிங்கம் அவர்களின் எண்பதாவது பிறந்த தினத்தையும், திருமணபந்தத்தில் இணைந்து ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து 51ஆவது ஆண்டில் கால் பதிக்கும் எம் அன்புப் பெற்றோரை இன்னும் பல ஆண்டுகள் வாழ பெருமிதத்துடனும் பேருவகை கொண்டும் மனமார வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்

பிள்ளைகள்
லோ.நளினி
கோ.தயாளன்
கு.ராஜினி
கோ.குணாளன்

மருமக்கள்
இ.துரைராஜசிங்கம்
அ.குமாரதாசன்
த.சுசிகலா
கு.யாழினி
சு.சதீஸ்குமார்

Best Wishes

பேரப்பிள்ளைகள்
ச.லோகினி
த.செந்தாளன்
த.ஜெனாளன்
கு.பவிஷ்ணா
கு.ருத்வித்
கு.பிரதீப்
கு.ருதீப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சேவை செய்யவே அரசியலுக்குள் நுழைந்தேன்

## அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்குசேவைசெய்யவேண்டும் என்பதற்காகவே தான் அரசியலுக்குள் நுழைந்ததாக பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பு கல்லடியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சிக் காரியாலயத்தைத் திறந்து வைத்த பின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்குப் பின்னர் இப்பகுதி மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்புக்கிடைத்துள்ளது.

பெரும்பான்மையினருக்கான சகல உரிமைகளும் வசதி வாய்ப்புக்களும் நாட்டின் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் உடன்பாடு கண்டதாகவே தற்போதைய அரசு கோலோச்சுகிறது.

இதற்குப் பின்னர் இந்த நாட்டில் இன, மத, பேதம் உருவாக வாய்ப்பளிக்க முடியாது. நாட்டின் அனைத்து மதத்தினருக்கும் அந்தஸ்து உண்டு. இரண்டாயிரம் வருட கால இலங்கை வரலாற்றில் நாம் இணைந்து வாழ்ந்து வந்துள்ளோம்.

மீண்டும் அத்தகைய ஒரு நிலைமைக்கு இலங்கையர் என்ற உன்னத ஒரு இனம் என்ற சமுதாயத்தை உருவாக்க நாம் உழைக்க வேண்டியுள்ளது.

மகிந்த மீண்டும் நாட்டின் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களிடம் குரோதங்களை விதைத்து அதன் மூலம் ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி மேற்கொள்கின்றார்.

புதிய அரசியல் யாப்பிலே சிறப்பான ஏற்பாடுகள் மூலமாக இந்த நாட்டின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு ஒரே நாடு ஒரே இலங்கையர் நாம் என்ற அடிப்படையில் சகலரும் சகலதும் பெற்று வாழ ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்தள விமான நிலையம் இந்திய முதலீட்டாளரிடம்

## பிரதியமைச்சர் அபேசிங்க தகவல்

மத்தள விமான நிலையத்தை இந்திய முதலீட்டாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்க தற்பொழுது பேச்சுவார்த்தை ஆரம்பிகக்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில்விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய முதலீட்டாளர் மற்றும் அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மத்தள விமான நிலையத்தின் மாதாந்த வருமானம் 40 இலட்சம் ரூபாய். அதற்கான செலவு 250 இலட்சம் ரூபா. ஒரு நாளைக்கு 3 விமானங்களே பறக்கின்றன. ஒரு மாதத்துக்கு கடன் செலுத்துவதற்கு மாத்திரம் 3 ஆயிரம் இலட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது.

வருடத்துக்கு 360 கோடி ரூபா வீதம் எட்டு வருடங்களுக்கு கடன் செலுத்த வேண்டியுள்ளது. இந்த விமான நிலையத்தை அமைக்க மகிந்த அரசாங்கம் 4000 கோடி ரூபாவை செலவு செய்துள்ளது.

அரசாங்கத்துக்கு மேலும் இந்த கடன் சுமையை தூக்கிப் பிடிக்க முடியாது. இதனாலேயே இவற்றை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு விட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரு வதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஷிராந்தி ராஜபக்ஷவின் நிறுவனத்தின் வாகனங்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்'வின் மனைவி சிராந்தி ராஜபக்ஷவின் சிரிலியே சவிய நிறுவனத்தின் வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த பேருந்து ஒன்று மற்றும் நோயாளர் காவு வண்டி என்பன குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிரிலியே சவிய அமைப்பிற்கு சொந்தமான டிபென்டர் ரக வாகனம் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை வழக்கு தொடர்பில் இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த டிபென்டர் ரக வாகனம் தொடர்பில் வாக்கு மூலமொன்றை பதிவு செய்ய சிராந்தி ராஜபக்ஷவிற்கு நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும், சிராந்தி ராஜபக்ஷ இந்த விசாரணைகளில் இதுவரையிலும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரவி மற்றும் அர்ஜுன் கையெழுத்திட்ட நாணயத்தாள்களை இரத்துச்செய்க

அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆகியோரின் கையெழுத்துடன் கூடிய நாணயத்தாள்களை பாவனையில் இருந்து நீக்குமாறு அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி பிணைமுறிப்பத்திர மோசடி தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க நிதியமைச்சராகவும் அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகித்த போது வெளியிடப்பட்ட நாணயத்தாள்களின் எண்ணிக்கை குறித்தும் உடனடியாக தேடிப் பார்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# 'என்னைக் காப்பாற்று'



அமைச்சர் ரவி கருணாநாயக்க எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு கொழும்பு ஆங்கில செய்தித்தாள் ஒன்று அவருடைய அண்மைக் கால நிழல் படம் ஒன்றை "இன்று என்னை காப்பாற்று" "வழியை காட்டு" என்று தலையங்கம் இட்டு வெளியிட்டுள்ளது. (இ-7)

# உள்ளூராட்சித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்

## ரோசி சேனாநாயக்க அறிவிப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது கொழும்பு மாநகரசபைக்காக தாம் போட்டியிடவுள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரை தூய்மையான குப்பைகளற்ற நகரமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். கொழும்பு நகர எல்லைக்குள் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக புதிய பொருளாதார கொள்கைகள் வகுக்கப்படும். ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைகளில் ஒன்றான கொழும்பு நகரை அபிவிருத்தி செய்ய கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# சிங்கள மக்களின் மனங்களை மாற்ற முயற்சிக்க வேண்டும்

## ஆசிரியராக மாறும் அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்து

சிங்கள மக்களின் மனங்களை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது சிங்கள மொழியில் உரையாற்றுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் எந்த பகுதியில் தமிழ் மக்கள் வாழ்ந்தாலும், அவர்களின் துன்பங்களை சிங்கள அமைச்சர்கள் மத்தியில் அவர்களது மொழியில் கொண்டு செல்வதன் மூலம் தான் மாற்றமொன்றைகொண்டு வர முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிங்கள மொழியையும், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் மொழியையும் தான் கற்றுக்கொடுக்கவுள்ளதாக அமைச்சர் மனோ தெரிவித்துள்ளார். (இ-7)

# அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கே அரசு முன்னுரிமையளித்து வருகிறது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)



நாட்டிலுள்ள சிறுவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதோடு, கிராமத்து மக்கள் தாம் எதிர்கொள்ளும் நாளாந்த பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்து அவர்களது பொருளாதாரத்தை வலுப்படுத்தும், அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக தற்போதைய அரசு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரலகங்வில பகுதியில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ்.எஸ்.சி டெஸ்ட்; ஜடேஜா அசத்தல் சுழல் பந்து

# இந்தியா இன்னிங்ஸ் வெற்றியுடன் தொடரைக் கைப்பற்றியது

# அடுத்தடுத்து 8 தொடர்களை வென்றும் சாதனை



ரவிந்திர ஜடேஜாவின் 'அசத்தலான சுழலில் சிக்கிய இலங்கை அணி, இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வென்ற இந்தியா 1:0 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட், கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது.

முதல் இன்னிங்ஸில் இந்தியா 622/9 ('டிக்ளேர்'), இலங்கை 183 ஓட்டங்கள் எடுத்தன. பின், 'பொலே-ஒன்' முறையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கருணாரத்ன (92), புஷ்பகுமார (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணியின் கருணாரத்ன, மொஹமட் ஷமி பந்தை பவுண்டரிக்கு அனுப்பி, டெஸ்ட் அரங்கில் தனது 6ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். அஷ்வின் பந்தில் 'நைட்வோட்ச்மேன்' புஷ்பகுமார (16) போல்டானார். ரவிந்திர ஜடேஜா 'சுழலில்' அணித் தலைவர் சண்டிமல் (2) சிக்கினார்.

அடுத்து வந்த மத்யூஸ், ஜடேஜா வீசிய 80ஆவது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் விளாசினார். ரவிந்திர ஜடேஜா 'சுழலில்' கருணாரத்ன (141), மத்யூஸ் (36), டில்ருவான் பெரேரா (4), தனஞ்ஜெய டி சில்வா (17) ஆட்டமிழந்தனர். ஹர்திக் பாண்டியா பந்தில் நிரோஷன் டிக்வெல (31) வெளியேறினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி 386 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

பந்துவீச்சில் அசத்திய ஜடேஜா 152 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 எனக் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும 12ஆம் திகதி பல்லேகலேயில் ஆரம்பமாகிறது.

**ஜடேஜாவுக்கு போட்டித் தடை**

ரவிந்திர ஜடேஜாவுக்கு மூன்றாவது டெஸ்டில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் 2வது இன்னிங்ஸின் 58வது ஓவரை ஜடேஜா வீசினார். அப்போது பந்தை பெற்ற இவர், 'கிரீசில்' நின்று கொண்டிருந்த இலங்கையின் கருணாரத்ன நோக்கி ஆபத்தான முறையில் எறிந்தார்.

போட்டி முடிந்ததும் நடுவர் ரோட் டக்கர் (ஆஸி.,) மற்றும் புரூஸ் ஆக்சன்போர்ட் (ஆஸி.,) சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் (ஐ.சி.சி.,) புகார் தெரிவித்தனர். இது, ஐ.சி.சி., விதிமுறையை மீறிய செயல் என்பதால், 3 அபராத புள்ளிகள் கொடுக்கப்பட்டன.

ஏற்கெனவே, கடந்த ஒக்டோபரில் நியூசிலாந்துக்கு எதிரான இந்தூர் டெஸ்டில் விதிமுறை மீறிய ஜடேஜாவுக்கு 3 அபராத புள்ளிகள் கொடுக்கப்பட்டன. ஐ.சி.சி., விதிப்படி 4 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் விதிக்கப்பட்டால் ஒரு டெஸ்ட் அல்லது இரு ஒரு நாள் அல்லது இரு 'இருபது-20' போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்படும். இதன்படி, ஜடேஜாவுக்கு எதிர்வரும் மூன்றாவது டெஸ்டில் (பல்லேகலே, ஒக.12-16) விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.



## உலக தடகள சம்பியன்ஷிப்

# வெண்கலத்துடன் விடைபெற்றார் போல்ட்

உலக தடகள சம்பியன்ஷிப் 100 மீ., ஓட்டத்தில் ஜமைக்காவின் உசைன் போல்ட், வெண்கலப் பதக்கம் வென்றார். அமெரிக்காவின காட்லன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

லண்டனில், 16ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் நடக்கிறது. இதில் ஆண்களுக்கான 100 மீ., ஓட்டத்தின் அரையிறுதியில், உலகின் 'மின்னல் வேக மனிதன்' ஜமைக்காவின் உசைன் போல்ட், பந்தய தூரத்தை 9.98 வினாடிகளில் கடந்து 2 ஆவது இடம்பிடித்து இறுதிக்கு தகுதி பெற்றார்..

அடுத்து நடந்த இறுதியில் ஜமைக்காவின் உசைன் போல்ட், யோகன் பிளாக், அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் அமெரிக்காவின் காட்லின், பந்தய தூரத்தை 9.92 வினாடியில் கடந்து முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். இதன்மூலம் இவர், உலக தடகள சம்பியன்ஷிப் 100 மீ., ஓட்டத்தில் 12 ஆண்டுகளுக்கு பின், தங்கம் வென்றார். கடைசியாக 2005ல் பின்லாந்தில் நடந்த உலக தடகள 100 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்றிருந்தார்.

அதன்பின் ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய காட்லின், 2006 முதல் 2010 வரை போட்டியில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டிருந்தார். தடையில் இருந்து மீண்ட இவர், 2013, 2015ல் நடந்த உலக தடகள 100 மீ., ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.


இப்போட்டியில் அசத்திய மற்றொரு அமெரிக்க வீரர் கிறிஸ்டியன் கோல்மேன் (9.94 வினாடி) இரண்டாவது இடம்பிடித்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

**போல்ட் ஏமாற்றம்**

தனது கடைசி 100 மீ., போட்டியில் பங்கேற்ற உசைன் போல்ட் மீது அதிக எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் பந்தய தூரத்தை 9.95 வினாடியில் கடந்து 3வது இடம் பிடித்த இவரால், வெண்கலப் பதக்கம் மட்டுமே பெற முடிந்தது. இதன்மூலம் உலக தடகள 100 மீ., ஓட்டத்தில் 4ஆவது முறையாக தங்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தார். ஏற்கெனவே இவர், 2009 (பெர்லின்), 2013 (மொஸ்கோ), 2015ல் (பீஜிங்) நடந்த உலக தடகள 100 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்றிருந்தார். உலக தடகளத்தில இதுவரை இவர், 11 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 14 பதக்கங்கள் வென்றுள்ளார்.

இதுகுறித்து போல்ட் கூறுகையில், "உலக தடகள 100 மீ., ஓட்டத்தில் தங்கம் வெல்ல முடியாதது வருத்தம் அளிக்கிறது. இருப்பினும் எனக்கு ஆதரவு அளித்து ஊக்கப்படுத்திய அனைவருக்கும் நன்றி," என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்களுக்கான நிதி 10 வீதத்தால் குறைப்பு

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு 10 வீதத்தினால் குறைக்கப்படவுள்ளது. வரட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இவ்வாறு அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சுக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத நிதியும் மீளப் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

மண்சரிவு, மழை வெள்ளம்போன்ற காரணிகளினால் சேதமடைந்த பாடசாலைகள் உள்ளிட்டனவற்றை புனரமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. (இ-7)

# அமைச்சர் ரவியை பாதுகாக்கும் முயற்சியில் மாநாயக்க தேரர்கள்



(கொழும்பு) வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை பாதுகாக்கும் முயற்சியில் சில மாநாயக்க தேரர்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் ரவி கருணாநாயக்க மீது மட்டும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள், தேர்தல் நடத்தப்படாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கவனத்திற் கொள்ளாது ரவி கருணாநாயக்கவை மட்டும் இலக்கு வைத்து அழுத்தங்களை பிரயோகிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என மாநாயக்க தேரர்கள் கொழும்பில் கூடி ஆராய்ந்துள்ளனர். (இ-7)

# 17ஆம் ஆண்டு நினைவலைகள்



மஞ்சமதில் மால்மருகன்
வீதிஉலா வருகையிலே - நின்
நெஞ்சமதில் வலி கொண்டு
வீழ்ந்தனையோ - உமை
தஞ்சமெனக் கொண்டவர்கள்
கதிகலங்கி நின்றிட
பத்தொடு ஏழு ஆண்டுகள் எமை
பரிதவிக்க விட்டு விண்ணகம் ஏகினீரோ...!

அமரர்

## திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. —குடும்பத்தினர்—

# ரவி விரைவில் வெளியேற்றம்

## ஜனாதிபதி உறுதி

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க அரசாங்கத்தில் இருந்து விரைவில் வெளியேற்றப்படுவார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவது குறித்து கவனம் செலுத்திவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ளார்.

இந்த நிலையில் கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கடந்த மூன்றாம் திகதி நாடாளுமன்ற தலைமை அதிகாரி நீல் இத்தவெலவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதி மோசடிச் சட்டம் மற்றும் நிதிப் பரிமாற்ற அறிக்கையிடல் சட்டம் ஆகியவற்றின் கீழ் ரவி கருணாநாயக்க நம்பிக்கை இழந்துள்ளதாக அந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# அரசாங்கத்தில் இருந்து விலகும் சுதந்திரக் கட்சியின் முதல் அணி

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை முடிவடைந்த பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து சுயாதீன அணியாக எதிர்க்கட்சி வரிசையில் அமர தீர்மானித்துள்ளதாக அந்த அணியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் 12 பேரை கொண்ட முதலாவது அணி அரசாங்கத்தில் இருந்து விலக உள்ளதுடன் அதற்கான சுப நேரத்தை கணித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அடுத்த அணி சில வாரங்களின் பின்னர் சுயாதீன அணியுடன் இணைந்து கொள்ளும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் இதில் அடங்குவதாகவும் அந்த சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

07.08.2017
(ஆடி 22, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பூரணை பின்னிரவு 12.18 மணிவரை
திருவோணம் பின்னிரவு 4.50 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
பூரணை விரதம், அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம் | | சூரி,செவ்<br>புத,ராகு |
| சந்<br>கேது | | | |
| | சனி | | குரு |

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடருவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,குடும்பத்தில் நிலவி வந்த சொல் யுத்தம் மாறும்.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானமாக நடந்து கொள்வது அவசியம், வேலைச்சுமை அதிகரிக்கும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள். மனச்சோர்வு ஏற்படலாம்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், வெளியூர் பயணமொன்றால் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையோடும் தைரியத்தோடும் பணிபுரியும் நாள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் முண்டு.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், தொட்ட காரியங்களில் வெற்றிபெற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மீனம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் எந்த மூலையில் இருந்தாலும் தமது கலாசாரங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும்

## வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவிப்பு

நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்துவரும் தற்காலத்தில் தமிழ் கலாசாரத்தினை பாதுகாப்பதற்கு புலம்பெயர் வாழ் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் எடுத்துவரும் முயற்சிகளை தான் வரவேற்பதாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது மாநாடு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்களில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆரம்பமாகியது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூகங்களின் கலாசாரத்தினை பாதுகாப்பது கடினமாகவுள்ள இக்கால கட்டத்தில் இதுபோன்றதொரு மாநாட்டை நடத்துவது பாராட்டத்தக்க விடயம். இவ்வாறானதொரு மாநாட்டை நடத்துவது என்பது மிகவும் கஷ்டமான காரியம்.

நீண்டகாலமாக எம் முன்னோர்கள் பின்பற்றிவந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் ஏனைய பழக்க வழக்கங்களோடு, கலாசாரங்களோடு கலந்து செல்கின்ற காலம் தற்போதைய காலமாகும்.

சீன தேசத்திற்கு விடுதலையை முதலில் பெற்றுக் கொடுத்த தலைவர் மாவோ சேதுங் பார்வையில் கலாசாரம் என்பது அரசியல் பொருளாதாரம், காலநிலை, புவியியல் ஆகியவற்றின் நம்பிக்கை கலப்பினால் ஏற்படுவது என தெரிவித்துள்ளார். இதுபோன்று உருவா



கிய தமிழ் கலாசாரம் நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு சேவையாற்றியிருக்கின்றது என நான் எண்ணுகின்றேன்.

சங்கீதம், இசை, கவிதை, சித்திரம், சிற்பம், கட்டடக்கலை, மொழி, சமயம் ஆகிய அனைத்திலும் உள்ள விசேடமான வித்தியாசம் கலாசாரம் ஆகும். அனைத்திலும் ஒரு வேறுபாடு இருக்கிறது. தமிழ் கலாசாரத்திற்கும், சீனக் கலாசாரத்திற்கும் தமிழ் கலாசாரத்திற்கும் மற்றைய கலாசாரத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. அது தான் இயற்கையும் கூட.

எனது பார்வையில் இந்த உலகம் அழகிய பூந்தோட்டம். இந்த தோட்டத்திலே பூக்கின்ற பூக்கள் பல நிறங்களில், பல மணங்களில், பல வடிவங்களில் அமைந்திருக்கின்றன. அதனால்தான் இந்தத் தோட்டம் அழகாக உள்ளது. ஒரேமாதிரியான பூக்கள் இருந்தால் அது அழகாக இருக்காது. இதே போன்று இந்த உலகில் பல கலாசாரம் இருப்பது அழகை கொடுக்கின்றது.

இந்த தமிழ் பண்பாட்டு இயகத்தின் பிரதானமான நோக்கம் தமிழ் மக்களின் கலாசாரங்களைப் பேணி பாதுகாப்பது மட்டுமே. இந்த நவீன காலத்தில் முன்னைய காலத்தினை விட பல வித்தியாசங்களை காண முடியும். முன்னைய காலத்தில் இனம், தேசம், கலாசாரம் என்று வெவ்வேறாக இருந்து வந்தது. ஆனால் தற்காலத்தில் சகல நாடுகளும், சகல நகரங்களும், பொருளாதாரங்களும் ஒன்றோடு ஒன்று பின்னி பிணைந்துள்ளது.


இந்த நவீன உலகம் பணம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற பலவற்றை தொழில்நுட்பம் ஊடாக விரைவாக சகல நாடுகளையும் ஒன்றிணைத்துள்ளது. அது அதிவேகமான மாற்றத்திற்கு உள்ளாக்குகின்றது எனச் சுட்டிக்காட்டினார்.

இந்த வேளையிலே நான் உங்களிடம் ஒன்றை கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். தமிழ் மக்களாகிய நீங்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் எந்தத் திசையினில் இருந்தாலும் உங்கள் உங்கள் கலாசாரங்களைப் பேணி பாதுகாத்துக் கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-60)




## வாட்டி வதைக்கும் வரட்சி





வடமராட்சி கரவெட்டி பகுதியில் வயல் பகுதியில் அமைந்துள்ள குளங்கள் வெப்பம் காரணமாக வற்றி வரண்ட நிலமாக காணப்படுகின்றது. இதனால் கால்நடைகள் தண்ணீருக்காக அலைந்து திரிவதையும் சில கால்நடைகள் இறந்து கிடப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. (இ-60)



(படம்:-மகாலிங்கம்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு கால்நடை காரியாலயத்தில் வைத்து வடக்கு மாகாணசபையால் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து க.தர்மலிங்கம், வே.சிவயோகம் ஆகியோர் 30 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கினர்.

## காக்கைதீவில் திடீர் தீ



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் காக்கைதீவு திண்மக் கழிவகற்றல் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் அப்பகுதி முழுவதிலும் பாரிய புகைமூட்டம் ஏற்பட்டது.

இது தொடர்பில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனுக்கு அப்பகுதி மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சென்று அப்பகுதியை நேரடியாக பார்வையிட்டதுடன் யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவினருடனும் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடி உடனடியாக அனர்த்த நிலைமைகளை கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்தார்.


இவ்வனர்த்த தடுப்புடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்போது வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெயநேசன், உறுப்பினர்களான அ.ஜோன் ஜிப்பிரிக்கோ, த.குமணன் ஆகியோரும் உடனிருந்தனர். (இ-7)

## வரணி இடைக்குறிச்சி மேற்கு கற்குழி குளம் புனரமைப்பு

இடைக்குறிச்சிப் பகுதியில் அமைந்துள்ள கற்குழி குளமானது பல வருடங்களாக தூர்வாரப்படாமல் சேறும் சகதியுமாகக் காணப்பட்டது.

இந்நிலையில் அரசாங்கத்தினால் இவ்வருடம் கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட 5 இலட்சம் ரூபா நிதியில் இக்குளத்தைப் புனரமைப்பதற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் புனரமைப்பு



வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மக்கள் நீராடுவதற்கு இறங்குவதற்காக சாய்வான படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் வீதியை அண்டி காணப்பட்ட குளக் கட்டானது புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குளத்தில் காணப்படுகின்ற சேற்றை அகற்றுவதற்கான வேலைகள் இடம்பெற்றாலும் சிறிதளவே அகற்றப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே முழுமையாக சேற்றினை அகற்றி குளத்தை ஆழமாக்க வேண்டும் என்று பொதுமக்கள் தெரிவிப்பதுடன் தாம் நீராடி ஆடை மாற்றுவதற்கு அறையொன்றினை அமைத்துத் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)





சண்டிலிப்பாய் சேர்ச் ஒப்சவுத் இந்தியா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- இளவாலை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

அன்பு வாசகர்களே!


புருசோத்தமனால் எழுதப்படும் தமிழர் தலைவிதி என்ற இத்தொடர் 86 அங்கத்தை எட்டியுள்ளது. யுத்தத்திற்குப் பின்பான தமிழர்களின் நிலைப்பாட்டை பதிவு செய்வதே இத்தொடரின் நோக்கமாக இருந்தது.

தமிழர் தலைவிதி என்ற இத் தொடரில் யுத்தத்திற்குப் பின்பான தமிழ் அரசியல் தலைமையின் போக்கு, மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் தோல்விக்குப் பின்பான நல்லாட்சி அரசின்செயற்பாடுகள், தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்புக்கள், ஐ.நா. மனித வுரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர்கள், அக்கூட்டத் தொடரில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், தீர்மானங்களை அமுலாக்குவதில் நல்லாட்சி பெற்றுக்கொண்ட கால அவகாசம் என்பன தொடர்பாக பல விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தமையால் தமிழ் மக்களின் மனநிலையில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

இக்கட்டத்தில் முதலமைச்சர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய தகவல்களைப் பதிவு செய்வது அவசியமும் அவசரமும் எனக் கருதப்பட்டமையால், ***நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?*** என்பது தொடர்பில் தமிழர் தலைவிதியில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் பதிவு செய்யப்பட வேண்டிய விடயங்கள் இயன்றளவு முழுமையாக செய்யப்பட்டுள்ளது.




நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டமை, அதனைத் தொடர்ந்து புதிய அமைச்சர்களின் நியமனம், வடக்கு மாகாண சபையின் அமர்வுகள், அங்கு நடைபெற்ற விடயங்கள் பற்றி மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டு இத்தொடரில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

இப்போது மீண்டும் விட்ட இடத்தில் இருந்து தமிழர் தலைவிதியைத் தொட்டுச் செல்வது இத்தொடரை நகர்த்திச் செல்வதற்குப் பொருத்துடையதாகும் எனக் கருதப்படுவதால் நாளை தொடக்கம் தமிழர் தலைவிதியின் தொடர் இங்கு பிரசுரமாகும்.

86 தொடர்களைத் தாண்டி இன்று 87 ஆவது தொடரை ஆரம்பிப்பதற்கிடையில் சில நாட்கள் இடைவெளி ஏற்பட்டமைக்காக மனம் வருந்துகின்றோம்.

எனினும் அந்த இடைவெளி தொடரின் நீட்சிக்கும் அதை வாசிப்பவர்களின் உணர்வு நிலைக்கும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டாது என்பது நம் நம்பிக்கை.

இவை ஒரு சிறு தகவல் மட்டுமே. இதேவேளை தமிழர் தலைவிதி என்ற தொடர் பற்றி சில விடயங்களை வாசகர்களாகிய உங்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பது நம் பெரு விருப்பம். அந்தவகையில் தமிழர் தலைவிதி என்ற இத் தொடர் யாருக்கும் எதிரானதல்ல. மாறாக உண்மையை-யதார்த்தத்தை சரியாகப் பதிவு செய்தல் வேண்டும் என்ற அடிப்படையில் எழுதப்படுவதாகும்.

புருசோத்தமனால் எழுதப்படும் இத்தொடரில் வெளிவரும் விடயங்கள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான அல்லது திரிபுபட்ட கருத்துக்கள் இருப்பதாக கருதும் எவரும் தமது கருத்துக்களைத் தாராளமாக முன்வைக்க முடியும்.

வலம்புரி நாளிதழைப் பொறுத்தவரை வலம்புரி யாருக்கும் எதிரானதல்ல. யாருடைய கருத்துக்களையும் அதுபுறந்தள்ளியதும் கிடையாது. இப்போது சிலர் வலம்புரியை விமர்சிக்கின்றனர். செய்திகளைத் திரிபுபடுத்துவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இவ்வாறு குற்றஞ்சாட்டுபவர்கள் செய்தித் திரிபுபற்றியோ, அன்றி உண்மைக்குப் புறம்பான செய்திகள் பற்றியோ வலம்புரி நிர்வா கத்துடன் தொடர்பு கொள்ள வில்லை.

மாறாக அவர்கள் வலம்புரி ஆசிரியர் பீடத்துடன் தொடர்புகொண்டு தமது பக்கத்து நியாயத்தை முன்வைப்பார்களாக இருந்தால் அவர்களின் கருத்துக்கள் நிச்சயம் இவ்விடத்தில் பதிவு செய்யப்படும்.

அதேவேளை வாசகர்களும் இத்தொடர் தொடர்பில் தங்களின் கருத்துக்களை தாராளமாக முன்வைக்கமுடியும்.

தமிழர் தலைவிதி எனும் இத்தொடரில் கடந்த பொதுத் தேர்தல் தொடர்பில் சில விடயங்களைப் பிரஸ்தாபித்திருந்தோம். அந்த விடயங்கள் அனுமானமாகக் கூறப்பட்டவை அல்ல. இது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் என்ற பதவி அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் கடிதம் ஒன்றை வலம்புரிக்கு அனுப்பி வைத்தார்.

எனினும் அந்தக் கடிதம் இங்கு பிரசுரிக்கப்படவில்லை என்பதை முதலில் தெரிவித்தாக வேண்டும். யாழ்ப்பாண அரச அதிபர் எழுதிய அந்தக் கடிதத்தில் கெட்டிக்காரன் புளுகு எத்தனை நாளுக்கு நிலைக்கும்... என்று எழுதப்பட்டிருந்தது. இது எமக்கு மிகுந்த வேதனையையும் மன உளைச்சலையும் தந்தது. இவ்வாறான ஒரு வார்த்தையை அவர் ஏன் பாவித்தார் என்பது இதுவரை புரியவில்லை.

எனினும் யாழ். அரச அதிபர் எழுதிய குறித்த கடிதம் தொடர்பில் மத்திய உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். அவர்களின் ஆலோசனைப்படி கடிதம் பிரசுரிப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

எதுவாயினும் பொதுத் தேர்தல் பற்றி இத்தொடரில் குறிப்பிட்ட விடயங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியவை. அதுபற்றி தெளிவாக இத்தொடரில் கூறப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் தர்மமும் நீதியுமே வெல்லும். இந்தச் சத்திய வாக்கோடு தமிழர் தலைவிதி தொடர்கிறது.

(வளரும்)

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலத்திட்ட நிதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கிளிநொச்சி கூட்டுறவு ஆணையாளர் கோரிக்கை



கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது, வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் மற்றும் பேரிணையம் ஆகியவற்றில் இருந்து விலகுவது தொடர்பாக, உடனடியாக இணையம் மற்றும் பேரிணையம் ஆகியவற்றின் பொதுச்சபைகளைக் கூட்டி நடவடிக்கை எடுக்குமாறு கோரி குறித்த இணையங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் கடிதம் மூலம் கோரி அதன் பிரதியினை தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தில் இருந்து விலகுவதாக சங்கத்தின் 18.08.2016 ஆம் திகதிய 04 ஆம் இலக்க பொதுச்சபைத் தீர்மானத்திற்கமைவாக சங்க அங்கத்தவர்களினதும், பணியாளர்களினதும் நிதியையும், கணக்கு விபரங்களையும் தந்துதவும்படி தங்களுக்கு அறியத் தந்துள்ளனர். எனவே, சங்க உபவிதி 6.7.4 இற்கு அமைவாக உறுப்புரிமைச் சங்கத்தின் தனி உறுப்பினர்களுக்கான நல உருத்துகள், நிதிப்பங்களிப்புகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் குந்தகமின்றி தொடர்ந்து ஆற்றுப்படுத்தலிற்கான கடப்பாட்டினை தங்களுடைய பேரிணையமானது கொண்டிருத்தல் வேண்டும். எனவே, இவர்களுடைய கணக்குகள், கொடுப்பனவுகள் தொடர்பாக தங்களது பொதுச்சபையைக் கூட்டி இது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தில் உள்ள, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் மற்றும் பணியாளர்களது நலத்திட்ட நிதிகளை வழங்குமாறு கோரி, கடந்த 10.07.2017 அன்று கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு பாரிய கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது குறித்த பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக ஒருமாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என, மாவ்ட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எழுத்து மூலம் உறுதியளித்திருந்தார். ஒரு மாத காலத்தை எட்டுவதற்கு இன்னும் சொற்ப நாட்களே எஞ்சியுள்ளன. எனவே, தொடர்ந்தும் எமது பிரச்சினையை தீர்ப்பதற்கு காலம்தாழ்த்தப்படுமாக இருந்தால் மீண்டும் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோர் ஒன்றுதிரண்டு தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையாமதனரூபன்மேலும் தெரிவித்தார். (7-8)




# சத்திரசிகிச்சை விடுதி திறந்துவைக்கப்பட்டது



சுதந்திர சுகாதார சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் சுகாதார சுதேச மருத்துவ மற்றும் சிறுவர் நன்னடத்தை அமைச்சு வடக்கு மாகாணம், எயிட்ஸ், கயரோகம், மலேரியா, நோய்களை அழித்தொழிப்பதற்கான கருத்திட்ட உலக நிதியத்தின் கீழ் முருங்கன் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சத்திரசிகிச்சை விடுதி மற்றும் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கான விடுதி ஆகியன வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரனும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் இணைந்து திறந்து வைத்தனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் டெனிஸ்வரன், வசதிகள் குறைவாக உள்ள போதிலும் வைத்தியர்களும் பணியாளர்களும் அர்ப்பணிப்பான சேவையாற்றி வருகின்றனர். எனவே இவ்வாறான வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்படுவது அவசியமானதுடன் சேவையும் இலகுபடுத்தப்படும். அத்துடன் வைத்தியசாலை அபிவிருத்தி குழுக்கள் அதிகாரிகளுடன் இணைந்து திட்டங்களை வகுத்து வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரமுயர்த்தி சிறந்த சேவையாற்ற வேண்டும் என்றார். மேலும் அமைச்சர் குறிப்பிடுகையில் இதேபோன்ற வசதிகள் குறைந்த வைத்தியசாலைகளை இனம்கண்டு அங்குள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (3-8)



மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டமானது கடந்த 3 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது...

# 2200 பொருத்து வீடுகள் வழங்க அரசு நடவடிக்கை

வவுனியா மாவட்டத்திற்கு பொருத்து வீடுகள் வழங்குமாறு கோரி 12 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். அதில் 2200 வீடுகளைப் பெற்றுக் கொடுக்க இந்து கலாசார அமைச்சு மற்றும் புனர்வாழ்வு சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் இணைப்பாளரும் சிறைச்சாலை கண்காணிப்பாளருமான எம். எம். சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவரிடம் வவுனியா மாவட்டத்தில் பொருத்து வீடுகளைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களின் நிலைமைகள் தொடர்பாக வினவியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலிருந்து பொருத்து வீடுகளைப் பெற்றுக்கொள்ள நான்கு பிரதேச செயலகங்கள், கிராம அபிவிருத்திச்சங்கம் மாவட்டச் செயலகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி பொதுமக்களின் விருப்பத்திற்கு அமைய அவர்களுக்கு பொருத்து வீடு பெற்றுக் கொடுக்க இந்து கலாசார அமைச்சு மற்றும் புனர்வாழ்வு சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பொருத்து வீடுகளில் வவுனியா தெற்கு பிரதேச செயலகப்பிரிவிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு 500வீடுகளை வழங்குவதற்கும் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திலுள்ளவர்களுக்கு 119 பொருத்து வீடுகளும் வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் 7 வீடுகளும் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 1074 வீடுகள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் மிகுதியாகவுள்ள 500 வீடுகளை மேலதிகமாக விண்ணப்பித்துள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா அரசாங்க அதிபரின் அனுமதியுடன் பூர்வீகக்கிராமத்திலுள்ளவர்களுக்கு 20 வீடுகளும் மீள் குடியேற்றக் கிராமங்களிலுள்ளவர்களுக்கு 60 வீடுகளையும் வழங்க சிபாரிசு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பித்துள்ளவர்களின் விண்ணப்பங்கள் மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்டு கிராம அபிவிருத்திச்சங்கம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் இணைப்பாளரும் சிறைச்சாலை கண்காணிப்பாளருமான எம். எம். சிவலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (3-8-250)

# வவுனியாவில் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



வவுனியாவில் தெரிவு செய்யப்பட்ட பத்து பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. குறித்த உதவிகள் நேற்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானின் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது, இஸ்லாமிக் நிவாரண அமைப்பின் நிதியுதவியுடன் 5 பேருக்கு மாடுகளும், 5 பேருக்கு ஆடுகளும் வழங்கப்பட்டன. பெரியதம்பனை, பாலமோட்டை, பாவற்குளம், ஆண்டியாபுளியங்குளம், காக்கையன்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் இஸ்லாமிய நிவாரண அமைப்பின் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8)

# உண்டியல் உடைத்து திருட்டு



வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் உண்டியல் உடைத்து திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள இந்து ஆலயத்தில் உள்ள உண்டியல் உடைத்து திருடப்பட்டுள்ளது.

ஆலயத்தில் உள்ள மின் விளக்கினை மாலை அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒளிரச் செய்து விட்டு அதிகாலை மின் விளக்கினை அணைக்க சென்ற போது ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு திருடப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது. அதனையடுத்து உடனே பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (7-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலிகளால் அழியும் சிறுபோக பயிர்ச் செய்கை

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை



கிளிநொச்சி - இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையை கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றதாக விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி - இரணைமடு குளத்தின் கீழ் உள்ள சிறுபோக செய்கையில் அதிகளவான பயிர்ச்செய்கைக்கு போதியளவு நீரின்மையால் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் எஞ்சியுள்ள பயிர்களை கட்டாக்காலி கால்நடைகள் தொடர்ச்சியாக அழித்து வருகின்றன.

இவ்வாறான கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான திகதி அறிவிக்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள போதும், சில பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை கட்டாக்காலிகளாக விட்டுள்ளனர். இதனால் அவை பயிர்களுக்கு பெரும் அழிவினை ஏற்படுத்தி வருகின்றன.

குறித்த சிறுபோக செய்கைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளுக்கு 7.5 மில்லியன் ரூபா செலவில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் அவற்றையும் மீறி சில பண்ணையாளர்கள் கால்நடைகளை பயிர்களுக்குள் விட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறான கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# புனரமைக்கப்படவுள்ள கிளிநொச்சி கண்டாவளை வாய்க்கால் வீதி

கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் கீழான அபிவிருத்திகளுக்கு இவ்வாண்டு கிடைக்கப்பெற்ற எட்டு மில்லியன் நிதியில் கண்டாவளைப் பிரதேசத்தில் கட்டுமான வேலைகள்ளை முன்னெடுத்து வருவதாக பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்மடுக் குளத்தின் கீழ் உள்ள பிரதான வாய்க்காலின் சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான பிரதான வாய்க்கால் வீதி புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

இதனால் விவசாயிகளும் குறித்த வாய்க்கால் வீதியினூடாக பயணிப்போரும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பொறியிலாளர் என்.சுதாகரன்,

"கல்மடுக் குளத்தின் கீழான கண்டாவளைப் பகுதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றன.

அத்தோடு இந்த பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளை எட்டு மில்லியன் ரூபா நிதி செலவில் முன்னெடுக்கவுள்ளோம்.

இந்நிலையில், அடுத்த வருடம் வீதியை நிரந்தர வீதியாகப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8)




# காடுகளில் ஆபத்தான வெடி பொருட்கள் வனவள அதிகாரிகள் தெரிவிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலுள்ள காடுகளில் ஆபத்தான வெடிபொருட்கள் காணப்படுவதாக வன வள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தங்களது ஆளுகைக்குள் காணப்படுகின்ற காடுகளில் பரிசோதனைக்காக சென்ற போதே அங்கு ஆபத்தான வெடிபொருட்கள் காணப்படுவதனை அவதானித்துள்ளனர்.

வெடிக்காத நிலையில் காணப்படும் வெடிபொருட்கள் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் எவ்வேளையிலும் ஆபத்தை ஏற்படுத்தலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இவற்றை அடையாளம் கண்டு அவற்றை அகற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (7-8-312)

# முல்லைத்தீவு இராணுவ தலைமையகத்தை அகற்ற முடிவு

கேப்பாப்பிலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தை அகற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்றை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த இராணுவத் தலைமையகத்தை அகற்றுவதன் மூலம்பொது மக்களுக்கு சொந்தமான 111 ஏக்கர் காணியை விடுவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்தவாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில், முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தை வேறொரு இடத்தில் அமைப்பதற்கு 48 மில்லியன் ரூபாவை புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு வழங்கவுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)



கிளிநொச்சி அம்பாள்குளம் அம்பாள் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு நேற்று 2.30 மணியளவில் அம்பாள் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-குமார்)



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட இளைஞரணியின் ஒழுங்கமைப்பில் நெளுக்குளம் காத்தான் கோட்ட அமனா கழகத்தின் மாணவர்களுக்கு நேற்று முன்தினம் கழக மண்டபத்தில் வைத்து மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில்

## அருள் நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ். மாவட்ட அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா இன்றுபிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.சர்ஜின் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் விருந்தினராக இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அதிபர் இ.கணேசானந்தன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாதகல் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம் பேச்சு,பண்ணிசை,மார்க்கண்டு சுவாமிகள் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, காந்திஜி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு என்பன இடம் பெறும். (இ-3)

## தெய்வீக சிறப்பு நிகழ்வுகளின் 11 ஆம் நாள் நிகழ்வு இன்று

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 11 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை6.45மணிமுதல்இரவு7.45மணிவரை நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி எனும் தலைப்பில் சைவப்புலவர் சிவஸ்ரீ இ.திருமாறக்குருக்கள் சொற்பொழிவாற்றுவார். (இ-3)




## கந்தபுராண எழுச்சி விழாவின் பதினொராம் நாள் நிகழ்வு இன்று

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயஉற்சவகாலத்தைமுன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் 11 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்யசுவாமிகள்,ஊரெழு மீனாட்சி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.கி.கேதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.சர்ஜின்தலைமையில்இடம் பெறும்.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராக யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் விமலாதேவி விமலநாதன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை கோப்பாய் ஆசிரிய கலா சாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்துவார். இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும் கலை நிகழ்வு களும் இடம்பெறும். (இ-7)

## தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கில் 11 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறும் இந் நிகழ்வில் பாட்டு- என்.சுபாகரன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம் - க.கண்ணதாஸ், கெஞ்சிரா- இரா.சிவராமன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)



யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம் நடத்தும் மாதாந்த திரையிடல் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பொதுசன நூலக குவிமாட சிறிய கேட்போர் கூடத்தில் ஜல்சாஹர் (சங்கீத அறை 1958, வங்காளம், 94 நிமிடங்கள்) சத்யஜித் ரே நெறியாக்கம் செய்த படம் இலவசமாக காட்சிப்படுத்தப்படவுள்ளது. (இ-51)

## தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் 'தாடகைவதம்' இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபை நடத்தி வரும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் (சங்கீத கதாப் பிரசங்கம்) இன்று மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் கம்பராமாயணம் பற்றிய இசைப் பேருரையில் தாடகை வதம் எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வைநித்தியானந்த சர்மா கதாப் பிரசங்கம் நிகழ்த் துவார்.

இதில் வயலின்-வித்துவான் அ.ஜெயராமன், ஆர்மோனியம்-கண்ணன், முரளி, மிருதங்கம்- வித்துவான் து.ராஜன்ஆகியோர்அணிசெய் கலைஞர்களாகக் கலந்து கொள்வர். (இ-3)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தருமலிங்கம் முழு இலங்கைக்குமான ஒரு சமாதான நீதவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டு கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை அன்று கல்கிசை மாவட்ட நீதிமன்ற நீதியரசர் உத்தல சுவந்துறுகொட முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இவர் ஏற்கனவே நீதியமைச்சின் கீழான ஒரு சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளரும் அரசகருமமொழி திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற ஆங்கிலம் - தமிழ்மொழி பெயர்ப்பாளரும் ஆவார்.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த. (உ.த.) கற்றுக் கொண்டிருந்த போதே அஞ்சல் திணைக்களத்தில் எழுதுவினைஞராக நியமனம் பெற்ற இவர் 1983 ஜுலை இனக்கலவரம் வரை அங்கு சேவையாற்றி ஓய்வு பெற்றார். இக் காலப் பகுதியில் அவ்வப்போது தேசிய தினசரிகள், வார வெளியீடுகள், சஞ்சிகைகளில் அரசியற் கட்டுரைகள், சிறுகதைகள், நகைச்சுவை கட்டுரைகள் போன்றவற்றை எழுதி வந்துள்ளார். அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னணி தொழிற்சங்கவாதியாக விளங்கிய இவர் சங்கத்தின் காலாண்டு பத்திரிகையான "அஞ்சல் ஒலி" யின் ஆசிரியராக பொறுப்பு வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆன்மீக அருளுரைகளில் 'இறுதி இலக்கு' இன்று

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகளில் (ஞானயக்ஞம்) இன்று திங்கட்கிழமை இரவு 7.15 மணிமுதல் 8 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும். இறுதி இலக்கு எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)




வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் தேவாரம் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன், க.சித்திரா ஆகியோரின் திருமுறைக் கச்சேரி இடம் பெற்ற போது...

## நல்லூரின் எழில் அழகன்

அழகான குமரன்
ஆரவாரத்துடன் வலம் வருவான்
இயல்பாக வணங்கும் - எமக்கு
இரங்கி வரும் அருள்வான்- தான்
ஈன்ற பிள்ளை போல் எனைக் காத்தருள்வான்
உலகத்தைச் சுற்றி வந்தான்
ஊரெல்லாம் காத்து நின்றான்
எல்லோரும் வேண்டி நிற்க-எம்
ஏழ்மையை போக்கி வைப்பான்
ஐம்புலன்களை அடக்கியே-நாம்
ஒவ்வொரு நாளும் வணங்கிடவே
ஓம் என்ற மந்திரத்தை உச்சரித்து
ஔவையாரும் வணங்கி வந்த நாயகன்
ஆஃவே அவன் தான் முருகன்
நல்லூரின் எழில் அழகன்!

கு.குகசுதன்
யா.இந்துக் கல்லூரி.

## முருகா உனது அருள் போதும்

நல்லையம்பதிக் காவலா
நல்ல தமிழில் உனைப் பாடவா
வெல்லவேண்டும் எம்பகைதனை
வேறு இங்கு யார் எம் துணை
சொல்ல வேண்டும் உன் புகழினை
சோதியான அழகினை
அல்லும் பகலும் உன்னையே
எண்ணித் துதிப்பேன் முருகனே-எம்
சொந்த மண்ணிலே ஆயிரம் துன்பங்கள்
சூழ்ந்து கொண்டது எப்படி!
உந்தன் வீதியில் எந்தன் நண்பனின்
உயிரைக் காத்தது எப்படி?
சுற்றி வந்து பகை முடித்த சுந்தரவேலா
பற்றிப் பிடித்தேன் உன் பாதம்
சுழலும் புவியில் உன்னருள் போதும்

கனே-பாக்கியன்
வேலணை.

## கருணைக் கடலே கந்தனே!

கலை தவழ் கனக நல்லை பதியுறையும் வேலனே-நின்னை
கைதொழுவோர் கண்களிலே சொரியும் கண்ணீர் கங்கையானதே
அலையெனவே நின் அருட் கோலம் காண திரண்டுவரும் எம்மை
அஞ்சேல் என்று அபயமளித்துக் காத்திடையா!

விலைமதிப்பில்லா நம் உறவுகளைத் தொலைத்து நிதம் தேடி அலைகிறோம்
வற்றாத கருணைக்கடலே மனமிரங்கி அருள்வாயப்பா!
குலையாது என்றும் உன்மீது நாம் கொண்ட பக்தி
கந்தவேளே! கண் திறந்து ஒரு தடவை எம்மைப் பாராயோ?

ஸ்ரீ.நதியரன்,
நல்லூர்.

## நல்லைக்கந்த சந்தப் "பா"

விந்தை யாகவே வாழ்ந்த நாயகன்
வித்தகத் தருண கிரியின் நாவிலே
சந்தச் சிந்தெலாம் வந்து சிந்தவே
சக்தி யீந்துவுன் சித்தி வேலினால்
உந்தி நாவிலே ஓமென் றேவரைந்
துன்னதக் கவி யூற்று மல்கினை
நந்த மிழ்க்குலப் பெருமை நல்கினை
நம்மை யாண்டருள் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Mayil
Moderling Beauty Care
மயில் அக்கடமி & அழகுக் கலை நிலையம்
அன்
மொடலிங் ஸ்ருடியோ & வீடியோ
மயில்
No.137, தபால்பெட்டி சந்தி
பலாலி வீதி, திருநெல்வேலி
தொ.பே.இ. 077 691 4123, 077 474 9101
கிளை இல. 37, இராமநாதன் வீதி,
கம்பஸ் முன்பாக, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவி கருணாநாயக்கவை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## சு.க. அமைப்பாளர் அதிரடி

(கொழும்பு)

ரவி கருணாநாயக்கவை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் தெரிவித்தார்.



ஹற்றனில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நிதி மோசடி தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த அரசாங்கம் ஊழல்களை ஒழிப்பதற்காகவே அரசாங்கத்தை மாற்றியுள்ளதாக கூறுகின்றார்கள். ஆனால் தற்போது அமைச்சர் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

வேறு எவராவது நிதி மோசடியில் ஈடுபட்டால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது.

அமைச்சரவைப் பதவி வகிக்கின்ற அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இவ்வாறான செயற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. எனவே அவரை அமைச்சு பதவியிலிருந்து நீக்கி உடனடியாக கைது செய்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாட்டின் ஜனாதிபதியையும் பிரதமரையும் கேட்டுக்கொள்கிறேன்" என பெரியசாமி பிரதீபன் மேலும் தெரிவித்தார். (இ-7)


# 8வது நினைவாண்டும் 28வது பிறந்தநாளும்

அமரர். சிறினிவாசன் சுபோதினி



வாழுகின்ற வயதில்
நீ உதிர்ந்து போனதால்
அதிர்ந்து போனோம்...
அழுது அழுதே கண்களில்
நீர் வற்றிப் போனதுவே...

உற்றவரும் பார்ப்போரும்
உலகையே ஆளுவாய் என்றிருக்க
உள்ளமதை கனலாக்கி
கண்ணீரை வாழ்வாக்கி
சென்றாயோ எங்கள்
கண்மணியே...

உன்னை நினையாத
நாளேது...
எங்களை தேற்ற நீயின்றி
மொழியேது

உன்னைப்போல் ஓர் பிள்ளை
வருமா?
விண்ணுக்கு ஏன் அழைத்தான்
-இறைவன்

மலர்வு 1989-08-07 உதிர்வு 2009-01-19

விழுந்து அழுகின்றோம் எட்டு ஆண்டுகளாக....

4ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு

(029)

என்றும் உன் நினைவுடன்
அம்மா, அப்பா, தம்பி,
அண்ணாமார்


# இலங்கை எம்.பிக்கள் சீனாவிற்குப் பயணம்

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சீனாவிற்குப் பயணம் செய்யவுள்ளனர்.

இலங்கைப் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் 15 உறுப்பினர்கள் அடுத்த வாரம் இவ்வாறு சீனாவிற்கு செல்லவுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்கேற்பதற்காக இவர்கள் இவ்வாறு சீனாவிற்கு செல்லவுள்ளனர். இந்தப் பயணம் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகளை மேலும் மேலும் வலுப்படுத்தும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். இலங்கைப் பாராளுமன்றிற்கு 2 இலட்சத்து 93 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உபகரணங்களை, சீன அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1155

### சுஜீவன்




### கஜன்




### காவேரி




### கஸ்தூரி




### பவன்




### யாழினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை பாதுகாக்க முடியாதவாறு இயற்கை மாறிவிடும்- பிரதமர் மோடி

இயற்கையை பாதுகாக்க மனிதன் தவறிவிட்டால், மனிதனை பாதுகாக்க முடியாதவாறு இயற்கை மாறிவிடும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



மியன்மார் தலைநகர் யாங்கூனில் நடைபெறும் சர்வதேச சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கில் வீடியோ conference மூலம் உரையாற்றிய மோடி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சவால்களை சந்தித்து வரும் இவ்வுலகில், பயங்கரவாதம் முதல் சகல பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை அல்லது விவாதம் மூலம் தீர்வு காணலாம் என இதன்போது தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாதம் மூலம் உலகை பிளவுபடுத்தும் சக்திகளை வேரறுத்து வெற்றி கொள்ள, இவ்வாறான பேச்சுவார்த்தைகளே தீர்வாக அமையுமென பிரதமர்மோடி மேலும் தெரிவித்துள்ளார். (8)

# அ.தி.மு.க.வை காக்கும் ஜெயலலிதாவின் ஆன்மா



தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்த நினைப்பவர்கள், தாமே வீழ்ந்து போவார்கள் என்றும், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் ஆன்மா இருக்கும் வரை தற்போதைய ஆட்சியை யாராலும் அசைக்க முடியாதென்றும் தமிழக முதல்வர் எடப்பரடி பழனிச்சாமி குறிப்பிட்டுள்ளார்.

பெரம்பலூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, மற்றவர்களை விமர்சிப்பவர்களுக்கு ஒருபோதும் எம்.ஜி.ஆர். ஆகிவிட முடியாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரையுலக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் எம்.ஜி.ஆர். போல செயற்பட வேண்டுமாயின், பொதுவாழ்வில் அவரைப் போன்று உதவியும் தியாகமும் செய்ய வேண்டும் என்றும், மக்களுக்காக உழைக்க வேண்டும் என்றும் மேலும் குறிப்பிட்டார்.

மாறாக, மக்கள் மனதில் இடம்பிடிக்க தெரியாதவர்களுக்கு ஒருபோதும் ஆட்சியை கவிழ்க்க முடியாதென முதல்வர் பழனிச்சாமி இதன் போது தெரிவித்தார். (8)

# தமிழக மக்களுக்கு ஓர் நற்செய்தி

தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளதென சென்னை வானிலை ஆய்வு மையம் எதிர்வுகூறியுள்ளது.

எதிர்வரும் இரண்டு நாட்களுக்கு மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவித்துள்ள சென்னை வானிலை மையம், நாளை மறுதினம் 9ஆம் திகதி முதல் மொன்சூன் பருவ மழை பெய்ய ஆரம்பிக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக நீடித்த வெப்பம் காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். இந்நிலையில், நேற்று பல இடங்களில் மழை பெய்ததால் வெப்பம் தணிந்து நிலம் குளிர்ந்துள்ளது.



இம்முறை தமிழகத்தில் பருவ மழை பொய்த்துப் போனதால் கடும் வரட்சி ஏற்பட்டு, குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இந்நிலையில், மழைக்காக மக்கள் காத்திருந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுள்ள திடீர் மழைவீழ்ச்சியானது, வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. (8)

பாரதச் செய்தி

# நளினி-முருகன் சந்திப்பு



(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்து வரும் தம்பதிகளான, நளினி மற்றும் முருகன் நேற்று முன்தினம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர்.

வேலூர் மகளிர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நளினியை அவரது கணவர் அங்கு சென்று சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, முருகனிடம் அவரது மனைவி நளினி, ஜீவ சமாதி குறித்து கேட்டதாக இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று பேரறிவாளன், நளினி, முருகன் உள்ளிட்டோர் 25 ஆண்டுகளுக்கும் மேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நளினி தன்னுடைய மகள் ஹரித்ராவின் திருமண ஏற்பாடுகளை செய்ய 6 மாதம் பரோல் வழங்க வேண்டும் என, உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளதுடன், நளினியின் கணவர் முருகன் தான் சிறையிலேயே ஜீவசமாதி அடைய அனுமதி கேட்டும் விண்ணப்பித்திருந்தார்.

ஜீவசமாதியை எதிர்பார்த்துள்ள முருகன், சிறையில் ஒருவேளை மட்டுமே உணவு எடுத்துக் கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற நளினி, முருகன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பில், மகள் ஹரித்ராவின் திருமண ஏற்பாடுகள் குறித்தும், முருகன் ஜீவசமாதி அடைவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (8)

# விவசாயிகளுக்காக கண்ணீர் வடித்த கல்லூரி மாணவி



தமிழகத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை சந்தித்த தனியார் கல்லூரியொன்றின் மாணவிகளில் ஒருவர், விவசாயிகளின் நிலையைக் கண்டு கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

இதனையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் கண்கலங்கியுள்ளனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் விவசாயிகள் முன்னெடுத்து வரும் இரண்டாம் கட்ட போராட்டம், நேற்று முன்தினம் சனிக்கிழமை 21 நாட்களை எட்டியது.

நேற்று முன்தினம், விவசாயிகள் தமது உடலில் சேறு பூசிக்கொண்டு போராடினார். இதன் போது, ஆர்ப்பாட்ட இடத்திற்குச் சென்ற மாணவிகள், விவசாயிகளுக்கு உணவுப் பதார்த்தங்களையும் வழங்கியதோடு, அவர்களின் நிலையைக் கண்டு வருந்தினர். (8)

# வெங்கையா நாயுடுவுக்கு தலைவர்கள் வாழ்த்து

துணை ஜனாதிபதி தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வெங்கையா நாயுடுவுக்கு பிரதமர் மோடி மற்றும் பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரியின் பதவிக்காலம் வரும் 10ஆம் திகதி நிறைவடைய உள்ள நிலையில், புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வெங்கையா நாயுடுவுக்கு பிரதமர் மோடி, தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ், தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், திருநாவுக்கரசர், தமிழிசை சவுந்தரராஜன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஜார்க்கண்ட் முதல்வர் ரகுபர் தாஸ், ப.சிதம்பரம் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



வெங்கையா நாயுடுவை எதிர்த்து போட்டியிட்ட கோபாலகிருஷ்ண காந்தியும் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும், தனக்காக வாக்களித்த அனைவருக்கும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

தனக்கு ஆதரவளித்த பிரதமர் மற்றும் அனைத்து தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ள வெங்கையா நாயுடு, குடியரசு தலைவரின் கரத்தை வலுப்படுத்த பாடுபடுவேன் என உறுதி அளித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்ஸின் கடைசி நகரும் வீழ்ந்தது

## முன்னேறும் சிரிய இராணுவம்

ஐ.எஸ். படைகளை சுற்றி வளைத்தது சிரியாவின் இராணுவம் என்ற தகவலை சிரிய மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.எஸ் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த ஹோம்ஸ் எனும் முக்கிய நகரத்தை இராணுவம் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து ஐ.எஸ் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்குப் பகுதிகள் நோக்கி இராணுவம் நகர்ந்து வருவதாக கூறப்படுகிறது.

பால்மைரா எனும் பழங்கால நகரத்திலிருந்து சுமார் 50 கி.மீ தூரத்திலுள்ள அல் சுக்னா எனும் பகுதியை கடந்த மார்ச் மாதம் இராணுவம் கைப்பற்றியிருந்தது.

அதன் அருகில் இன்னும் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் முழுக்கட்டுப்பாட்டிலுள்ள டீயர் அல்-சோர் எனும் மாகாணம் உள்ளது.

மட்டுமின்றி சுக்னாவின் முக்கிய பகுதிகளை இராணுவம் சுற்றிவளைத்துள்ளது என்று சிரிய அரசு செய்தி நிறுவனமான சானா தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளை அரசுப் படைகள் கைப்பற்றினால் சிரியா போரில் முழுமையாக வெற்றி பெற்றுவிடும் என்று கூறப்படுகிறது. சிரிய படைகளுக்கு ஆதரவாக



ரஷ்ய படைகள் செயற்பட்டு வருகிறது. அதேபோன்று குர்து படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க இராணுவம் பக்கபலமாக உள்ளது. (8)

# சீனாவில் வரலாறு காணாத வெப்பநிலை!

சீனாவில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஷான்ஸி மாகாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவு செய்யப்பட்டதாகவும் குறித்த வெப்பநிலை தற்போது படிப்படியாக அதிகரித்து செல்கின்றது எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் வெப்பநிலை 40 மற்றும் 50 டிகிரி செல்சியஸ் ஆக காணப்பட்ட நிலையில், அங்குள்ள பொது மக்கள் அசௌகரியமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த சீன வானிலை ஆராய்ச்சியாளர், நிலவி வரும் இக் கடும் வெப்பநிலை எதிர்வரும் மூன்று நாட்களுக்கு தொடரலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதனால் பொது மக்கள் வெளியிடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டுமென தெரிவித்தார்.

குறித்த நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த பொது மக்களில் ஒருவர், கடந்த 20 நாட்களாக மழை பெய்யவில்லை. அத்துடன் தற்போது நிலவி வரும் கடும் வெப்பநிலை காரணமாக நீர் நிலைகள் வற்றிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. வெளியிடங்களுக்கு செல்வது மிகவும் கடினமான காரியமாக மாறிவிட்டது.

இச் சூழ்நிலைக்கு எங்களால் முகங்கொடுக்க முடியவில்லையென தெரிவித்தார். (8)

# 2 வாரத்துக்குள் இந்தியா மீது தாக்குதல் நடத்துவோம்

## சீனா போர் மிரட்டல்

சிக்கிம் எல்லையில் இன்னும் 2 வாரத்துக்குள் இந்திய இராணுவம் மீது தாக்குதல் நடத்துவோம் என்று சீனா போர் மிரட்டல் விடுத்துள்ளது.

கடந்த சில நாட்களாக சீன இராணுவம், திபெத் தன்னாட்சி பகுதியில் 18 ஆயிரம் அடி உயர மலைப்பகுதியில் பீரங்கிகளை குவித்து போர் ஒத்திகையில் ஈடுபட்டு வருகிறது. இது இந்திய இராணுவத்தின் மீதான தாக்குதலுக்கான ஒத்திகை என்று சீன அரசின் அதிகாரப்பூர்வ ஆங்கில நாளிதழான 'குளோபல் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி ஷாங்காய் சர்வதேச நட்புறவு நிறுவனத்தின் சமூக அறிவியல் அக்கடமி ஆராய்ச்சியாளரான ஹு ஷியோங் என்பவர் அந்த நாளிதழில் எழுதிய கட்டுரையில் தெரிவித்திருப்பதாவது,

சமீபகாலமாக சீனாவுக்கு எதிராக இந்தியா பக்குவம் இல்லாத கொள்கை நிலைப்பாட்டை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் சீனா அதுபோல் நடந்து கொள்வதில்லை. பிரச்சினை இல்லாத இடங்களுக்குள் நுழைந்து பிரச்சினையை ஏற்படுத்தி பேரம் பேசுவதை இந்தியா கையாண்டு வருகிறது.

டோக்லாம் பகுதியில் இரு இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ள நிலை வெகுகாலத்திற்கு நீடிக்காது. அதை சீனா அனுமதிக்கவும் செய்யாது. இதற்கான போர் ஒத்திகைதான் தற்போது நடந்து வருகிறது.

இப் பகுதியில் இருந்து இன்னும் 2 வாரத்துக்குள் இந்திய இராணுவம் வெளியேற்றப்படும்.

இதற்காக சிறிய அளவிலான போர் நடவடிக்கையை சீன இராணுவம் மேற்கொள்ளும். இந்திய வெளியுறவு அமைச்சகத்திடம் தகவல் தெரிவித்த பிறகே இந்த தாக்குதல் நடத்தப்படும் என்று அவர் எழுதி உள்ளார். (8)

# ஏரியில் மீன் பிடித்த ரஷ்ய ஜனாதிபதி

சட்டை அணியாமல் வெற்று உடம்புடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஏரியில் மீன் பிடிக்கும் காணொளி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி விளாடி மிர் புடின் (64). பன் திறமை கொண்டவர். பல்வேறு சாகச நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கடந்த 1ஆம்திகதி முதல் 3ஆம் திகதிவரை கடும் குளிர் நிறைந்த சைபீரியாவில் 3 நாள் விடுமுறையை கழித்தார்.

அப்போது தைவர் பகுதியில் உள்ள மலை ஏரியில் நீச்சல் அடித்தும், மீன் பிடித்தும் மகிழ்ந்தார்.

சைபீரியாவின் கடும் குளிர் நிறைந்த மலை ஏரியில் சட்டை அணியாமல் வெற்று உடம்புடன் அவர் மீன் பிடித்து விளையாடும் காட்சிகள் தற்போது வெளியாகி உள்ளன.

அது குறித்த படங்கள் மற்றும் காணொளிகளை ரஷ்ய அரசு வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவில் தற்போது பல்வேறு அரசியல் சிக்கல் நிலவுகிறது. அதற்கு மத்தியில் சைபீரியாவின் தெற்கு பகுதியில் உள்ள டிவா என்ற இடத்தில் புடின் தனது விடுமுறையை கழித்தார். அவருடன் ரஷ்ய பாதுகாப்பு துறை அமைச்சர் செர்ஜி சோய்கு மற்றும் அதிகாரிகள் சென்று இருந்தனர். (8)

# தடைகள் மட்டுமே இறுதித் தீர்வாகாது

## சீனா கருத்து

வடகொரியா மீது ஐ.நா சபை கடும் பொருளாதார தடைகளை விதித்துள்ள நிலையில், தடைகள் மட்டுமே இறுதித் தீர்வாகாது என்றும், பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்றும் சீனா கருத்து தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்புகள் மற்றும் ஐ.நா சபையின் கட்டுப்பாடுகளை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகின்றது. குறிப்பாக கடந்த மாதத்தில் மட்டும் சக்தி வாய்ந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை இரண்டு முறை பரிசோதித்துள்ளது.

இதனையடுத்து. வடகொரியா மீது கடும் பொருளாதார தடைகள் விதிக்கும் வரைவு அறிக்கையை அமெரிக்கா ஐ.நா சபையில் தாக்கல் செய்துள்ளது. இந்த அறிக்கைக்கு ஐ.நா சபையும் சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. 2006ஆம் ஆண்டுக்குப் பின் வடகொரியா மீது கொண்டு வரப்படும் 7ஆவது தடை



தீர்மானமாக இது அமைந்தது.


இந்நிலையில், வடகொரியா மீது பொருளாதார தடைகள் விதிப்பது மட்டுமே இறுதித் தீர்வாகாது எனவும், ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியும் எனவும் சீன வெளியுறவு அமைச்சகம் கருத்து தெரிவித்துள்ளது.

வடகொரியா மீது பொருளாதார தடைகள் விதித்ததற்கு பெரிய அளவிலான ஆதரவை சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# ஹிரோஷிமாவில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

இரண்டாம் உலகப் போரின்போது 1945ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் அணுகுண்டு வீசப்பட்ட 72ஆம் ஆண்டு துக்கதினம் நேற்று ஜப்பானில் அனுஷ்டிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது, உலகின் முதல் அணு குண்டாக கருதப்படும் "லிட்டில் பாய்" குண்டை ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரின் மீது அமெரிக்கா 6-8-1945 அன்று வீசியது.

இரும்பைக் கூட உருக வைக்கும் 4000 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் குண்டு வீசப்பட்ட இடத்தின் அருகிலிருந்த அத்தனையும் பஸ்பமாகின. சுமார், ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மக்கள் இதில் கொல்லப்பட்டனர். இதற்கு அடுத்த அணுகுண்டு ஜப்பானின் துறைமுக நகரமான நாகசாகியில் ஓகஸ்ட் 9, 1945 அன்று வீசப்பட்டு, எழுபதாயிரம் பேரை பலி வாங்



கியது. இத் தாக்குதல் களைத் தொடர்ந்து ஓகஸ்ட் 15, 1945 அன்று ஜப்பான் சரணடைந்தது.

இந்நிலையில், இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வர காரணமாக அமைந்த ஜப்பானின் முக்கிய நகரமான ஹிரோஷிமா மீது அமெரிக்கா குண்டு வீசிய 72ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அணுகுண்டு வீசப்பட்டு பேரழிவை சந்தித்த ஹிரோஷிமா நகரில் உள்ள அமைதிப் பூங்காவில் நடைபெற்ற மௌன அஞ்சலி நிகழ்ச்சியில் ஜப்பானின் பிரதமர் ஷின்ஸோ அபே உட்பட பல வெளிநாட்டு பிரமுகர்கள் பங்கேற்றனர்.

இந் நிகழ்ச்சியில் பேசிய ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே, 'அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும்வகையில் அணு ஆயுத அச்சுறுத்தல் இல்லாத புதிய உலகம் உருவாக வேண்டும். இதற்காக அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.

கைவசம் அணு ஆயுதங்களை இருப்பு வைத்திருக்காத நாடுகளும், இருப்பில் வைத்துள்ள நாடுகளும் ஒன்றிணைந்து சர்வதேச அளவில் அணு ஆயுதங்களை ஒழிக்கும் இயக்கத்துக்கு தலைமை தாங்க ஜப்பான் தயாராகவுள்ளது என்று குறிப்பிட்டார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவியின் குற்றம் நிருபிக்கப்படாமல் இராஜினாமா செய்ய அவசியமில்லை

## சரத் பொன்சேகா கூறுகிறார்



(கொழும்பு)

குற்றவாளி என்று உறுதிப்படுத்தப்படும் வரையில் ரவி கருணாநாயக்க இராஜினாமாச் செய்ய வேண்டிய தில்லையென அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கடந்த அரசியல் புரட்சியில் முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவராக அமைச்சர் ரவி கருணாநாயக்க காணப்பட்டார். தவறாக எடைபோட்டுவிட்டு யாரும் சொல்லும் வார்த்தைகளுக்காக அவரை நாம் ஓரம் கட்டிவிட முடியாது எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

.கொழும்பில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு விட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார். (இ-7)

# அம்பாந்தோட்டையில் பாரிய கடற்படைத் தளம்

## காலி, தங்காலை தளங்களை மூட முடிவு

(கொழும்பு)

காலி மற்றும் தங்காலையில் அமைந்துள்ள இலங்கை கடற்படைத் தளங்கள் அம்பாந்தோட்டைக்கு மாற்றப்படவுள்ளதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன. அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு கையெழுத்திடப்பட்டதை அடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டின் படி, இராணுவத் தேவைகளுக்காக எந்தவொரு நாடும் அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பயன்படுத்த முடியாது. அதன் முழுமையான பாதுகாப்பையும் இலங்கையே கையாளும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, அம்பாந்தோட்டையில் இலங்கை கடற்படை பாரிய தளம் ஒன்றை அமைக்கவுள்ளது. இதற்காகவே தற்போது தங்காலையில் உள்ள இலங்கை கடற்படையின் தென்பிராந்திய தலைமையகம் மற்றும் காலியில் உள்ள கடற்படைத் தளம் என்பன அகற்றப்பட்டு, அவை அம்பாந்தோட்டையில் ஒருங்கிணைக்கப்படவுள்ளன.

இதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு, மீரிஸ்ஸவில் உள்ள கடலோரக் காவல்படைத் தளம் மேலும் பலப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெளிவிவகார அமைச்சர் ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும்

## தினேஷ் குணவர்த்தன வலியுறுத்து




(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரவிகருணா நாயக்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு தெரிவித்து வருகின்றனர். அதனால் தம்மால் வெற்றி கொள்ள முடியும் என்று கூட்டு எதிரணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் வெளிவிவகார அமைச்சர் பதவி விலகி செல்வதே மேலாகும். இல்லாவிடின் ஜனாதிபதி அவரை பதவி நீக்கம் செய்யவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் நாளை 8 ஆம் திகதி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கட்சித் தலைவர்களுக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் நாங்கள் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளோம். ஒருமுறை எங்களால் அதனை விவாதத்திற்கு உட்படுத்தவும் முடியவில்லை. இரண்டாவது தடவை ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்குட்படுத்தப்பட்டது.

ஆனால் அதனை வெற்றிகொள்ள முடியவில்லை. எவ்வாறெனினும் இம்முறை நாங்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிச்சயம் வெற்றிகொள்ள முடியும். காரணம் இம்முறை இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களும் தயாராக உள்ளனர். அவர்கள் எம்மை தொடர்பு கொண்டு தாம் இதற்கு ஆதரவு அளிக்கத் தயார் என்று கூறியுள்ளனர்.

அவர்கள் எம்மிடம் கூறியதால்தான் நான் இதனைக் கூறுகின்றேன். அது மட்டுமன்றி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக கலந்துரையாடவும் விவாதம் நடத்துவதற்கான திகதியை தீர்மானிப்பதற்கும் நாளை 8ஆம் திகதி கட்சித் தலைவர்களுக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்திருக்கின்றார். அந்த வகையில் அன்றைய தினம் விவாதத் திகதி தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். அதாவது இந்தப் பிரேரணை விவாதத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு முன்பதாகவே அமைச்சர் கருணாநாயக்க பதவி விலகிச் செல்வது நன்றாக இருக்கும். அப்படி அவர் செல்லாவிடின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை பதவிநீக்கம் செய்யவேண்டும் என்றார்.

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக கடந்த வியாழக்கிழமை கூட்டு எதிர்க் கட்சியின் 32 பேரின் கையொப்பங்களுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## தவறாகப் பேசுகிறவர்களும் புது அணுகுமுறையும்

தங்களைப் பற்றித் தவறாகப் பேசுகிறவர்களை மனிதர்களுக்கு இருவிதமாகத்தான் கையாளத் தெரிந்திருக்கிறது.

முதல் ரகத்தினர்: "என்னைப் பற்றி நீ எப்படி அந்த மாதிரிச் சொல்லப் போயிற்று?" என்று சண்டை போடுகிறவர்கள்.

இரண்டாவது ரகத்தினர்: ச்சே! அவர்கள் முகத்திலேயே விழிக்கக்கூடாது என்று ஒதுங்கி விடுகிறவர்கள்.

என்னைப் பொறுத்தவரை மூன்றாவது வழி ஒன்று உண்டு.

நம் தலையைக் காணாவிட்டால் நமக்கெதிரான கருத்தை அத்தனை பேரும் சொல்கிறார்கள். ஒரு தாயே கூடத் தன் மகனைப் பற்றிய மனக் குறைகளை அவனிடத்தில் நேரிடையாகச் சொல்லுவதும் இல்லை.

வேறுவிதமாகச் சொல்வது என்றால் முகத்திற்கு நேரே எவருமே எதுவும் சொல்லாமல் முதுகிற்குப் பின்னால்தான் சொல்கிறார்கள்.

ஒன்றை வெளிப்படையாகவே கேட்கிறேன். நம்மைப் பற்றிய குறைபாடுகளைக் கேட்டுக் கொள்ளும் மனநிலை அவரவர் வாயிலாகவே–நேரிடையாகக் கேட்டுக் கொள்ளும் மனநிலை நமக்கு உண்டா? ஒருபோதும் கிடையாது. எவருக்குமே கிடையாது. இதனால்தான் மற்றவர்கள் நாம் இல்லாத போது நம்மைப் பற்றிய மனக் குறையை வெளியிடுகிறார்கள்.

எனவே நம்மைப் பற்றித் தவறாகப் பேசுகிறவர்களிடமிருந்து நாம் விலகுவது அல்லது அவர்களுடன் சண்டை போடுவது என்று ஆரம்பித்து விட்டால் அது கட்டுப்படியாகாத விடயமாகி விடும்.

முதல்கட்டமாக, இடைப்பட்டவர்கள் நம்மைப் பற்றிப் பிறர் சொன்னதை மிகைப்படுத்தியிருப்பார்கள் அல்லவா, அதை நன்கு விசாரித்துக் கழித்து நீக்கிவிட்டு, மிகச் சரியாக என்ன சொல்லப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண் டும்.

சொல்லப்பட்டதில் சிறிதளவேனும் உண்மை இருந்தால் நம்மை நாமே திருத்தித் கொள்ள வேண்டியதுதான்.

உண்மையாக இருந்தாலும் பேசியவர் யாரோ என்றால் நாம் புறக்கணித்துவிடலாம். இவர்களுக்கெல்லாம் விளக்கம் தர வேண் டிய அவசியம் நமக்கு இல்லை.

நமக்கு வேண்டியவர்கள் என்றால் மட்டும், "நீங்க என்னைப் பற்றி இப்படிச் சொன்னீங்கன்னு சொன்னாங்க. நான் அதை நம்பலை. காரணம், அதை என்கிட்ட நேரடியாகச் சொல்ற உரிமை உங்களுக்கு உண்டு" என்று ஆரம்பித்து அவர்களைத் தர்மசங்கடத்திற்கு ஆளாக்கி நெளிய வைக்க வேண்டும். இன்னும் கூட நாகரிகமான ஓர் அணுகுமுறையும் உண்டு.

"என்னைப் பற்றி இப்படி ஒரு தவறான கருத்து உண்டு என்பது எனக்கே தெரியும். ஆனால் உண்மை என்னான்னா..." என்று ஆரம்பிக்க வேண்டும்.

இந்த மூன்றாவது அணுகுமுறைதான் மற்றவர்களின் வாயை நிரந்தரமாக அடக்குமே தவிர, முதல் இரண்டு அணுகு முறைகளும் முன்னிலும் அதிகமான அளவிற்கு நம்மைப்பற்றி மற்றவர்களைத் தவறாகப் பேசச் செய்யும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## சிநேகிதனே!



நடிகை ஓவியா வெளியேறிய பிறகு பிக் போஸ் வீடு முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது. இதுநாள்வரை ஓவியாவுடன் நெருக்கமாக இருந்துவந்த கவிஞர் சிநேகன், ஓவியாவை நினைத்து கண்ணீர் விட்டார். பின்னர் கமல் அழைத்து தனியாக சிநே கனுடன் பேசும்போது கூட அவர் கதறி அழுதார், அவருடன் பேசிக் கொண்டிருந்த கமலுக்கும் கண்கலங்கி விட்டது.

## கோபம்

நடிகை ஓவியா தற்கொலை முயற்சி செய்து வெளியேறியது ஒருப்புறமிருக்க, பிக்போஸ் நிகழ்ச்சியில் கமல்ஹாசன் செய்யாத ஒரு தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொள்வதாக கூறினார். சென்ற வாரம் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை போல பிகபோஸ் போட்டியாளர்கள் நடித்ததை பற்றி தான் கமல் இப்படி கூறியுள்ளார்.

அவர்களுக்கான டாஸ்க் நான் கொடுப்பதில்லை, மனநலம் குன்றியவர்கள் பற்றி கேலியாக நடித்து காட்டப்பட்டது ரசனைக்குரியதாக இல்லை, எனக்கு கோபமே இருக்கிறது. என் படங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவன் காமெடியனாக இருக்க மாட்டான், அவன் தான் கதாநாயகனாக இருப்பான். எனக்கு சமூக அக்கறை உள்ளது. இதுபோல் இனி நடக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், அப்படி நடந்தால் இந்த நிகழ்ச்சி எனக்குமுக்கியமில்லை (வெளியேறிவிடுவேன்) என கமல் கூறினார்.

### இன்றைய பிக்போஸ் மீம்ஸ்




## அடுத்த முறை



BiggBoss நிகழ்ச்சியில் பிரபலங்களை தேர்ந்தெடுக்கும் போது நிறைய பிளான்களை போட்டுள்ளனர் நிகழ்ச்சி குழுவினர். அப்படி மொடலிங் துறையில் ஒருவர் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற போது நிகழ்ச்சி குழுவினர் தரமணி படத்தில் நடித்த சாரா ஜார்ஜ் என்பவரை தான் அணுகியுள்ளனர். இதுகுறித்து சாரா ஒரு பேட்டியில், மொடலிங் துறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க முடிவு செய்து BiggBoss குழுவினர் என்னை கேட்டனர். ஆனால் நான் ஏற்கனவே சில வேலைகளில் கமிட்டாகி இருந்ததால் அந்த வாய்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.
அதன்பின்எனக்கு பதிலாக ரைசா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று கூறியுள்ளார். BiggBoss 2வது சீசன் வரும்போது கண்டிப்பாக நான் கலந்து கொள்வேன் என்றார்.

## ஓவியா! ஓவியா!



நடிகை ஓவியா மருத்துவரை சந்திக் க வேண்டும் என கூறியதால் அவரை பிக் போஸ் வீட்டில் இருந்து அனுப்பிவைத்தனர். அவர் ஒரு குறிப்பிட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல் பரவியது.

அதை அறிந்த ஓவியா ஆர்மியில் உள்ள அவரது ரசிகர்கள், அந்த மருத்துவமனைக்கு தொடர்ந்து போன் செய்து விசாரித்துள்ளனர்.

தொடர்ந்து ஆயிரக்கணக்கில் வந்த போன் கோல்களுக்கு "இல்லை" என பதில் சொல்லி புரியவைப்பதற்குள் அவர்களுக்கு பெரும் பாடாகிவிட்டது.

## ஆர்த்தி கணக்கு



ஓவியா வெளியேறியது பற்றி தெரிவித்துள்ள நடிகை ஆர்த்தி, இவ்வளவு ரசிகர்களை கொண்ட ஒரு நடிகை வெளிப்படையாக தன் காதலை வளர்ந்து வரும் ஒரு மொடலிடம் சொன்னது பெரிய விடயம், ஆனால் அவரோ தன் வருங்காலத்தையும் கரியரையும் எண்ணி பயந்து அதை நிராகரிக்கிறார். "ஓவியா நினைத்திருந்தால் பணத்திற்காக வீட்டில் இருந்திருக்க முடியும், டைட்டில் வென்றிருக்க முடியும். ஆனால் அவர் வாழ்க்கையில் ஜெயிப்பதற்காக வீட்டை விட்டு வெளியேறி, கோடிக்கணக்கான மக்களின் அன்பை வென்றுள்ளார்" என தெரிவித்துள்ளார்.

## சம்பளம்



டிவிக்களில் சீரியல்கள் மட்டுமே அதிக ரசிகர்களை கொண்டிருந்த நிலைமை பிக்போஸ் நிகழ்ச்சியால் மாறிவிட்டது. இந்த நிகழ்ச்சியின் போட்டியாளர்களுக்கு நாள் கணக்கில் சம்பளம் கொடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. நடிகை ஓவியாவுக்கு தினமும் 2.5லட்சம் ரூபாய் சம்பளமாக கொடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் சமீபத்தில் பிக்போஸ் வீட்டிற்கு புதிதாக வந்த பிந்து மாதவிக்கு தினமும் 3 லட்சம் ரூபாய் சம்பளம் என்று தகவல் வெளியாகியுள்ளது. இது தோராயமான சம்பள விபரம் மட்டுமே. உண்மையான விபரத்தை நிகழ்ச்சி நடத்துபவர்கள் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்தை அமைத்து மகிந்தவை பிரதமராக்குவோம்

## கூட்டு எதிரணி திட்டவட்டம்



"இந்த நாட்டில் எதிர் வரும் தேர்தல் எதுவாக இருந்தாலும் சரி, அந்தத் தேர்தலில் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் எதிர்ப்பானவர்கள் என்பதை எடுத்துக்காட்டி, தேர்தலை வெற்றி கொண்டு, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிக் காட்டுவோம்" என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மக்கள் சந்திப்பு, கினிகத்தேனை பிடாஸ் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே, காமினி லொகுகே, சீ.பீ.ரத்நாயக்க மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மகிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டை பாரிய நெருக்கடிக்குள்ளாக்கி நல்லாட்சி எனும் பேரில் அரசாங்கத்தை முன்னெடுத்து செல்கின்றனர். அம்பாந்தோட்டை துறைமுகத்தை வெளிநாட்டவருக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளனர். இந்தத் துறைமுகத்தின் ஊடாக இந்த நாட்டின் அரசாங்கம் பயனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றது.

"அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தியின் ஊடாக பாரிய பொருளாதார நெருக்கடிகளை இல்லாதொழிக்கலாம். ஆனால், இந்தத் துறைமுகத்தை வெளிநாட்டவருக்கு கொடுப்பதனால் இதில் கிடைக்கும் இலாபத்தை நாட்டின் தலைவர்கள் சிலர் தனது சட்டைப் பையிக்குள் நுழைக்கும் நிலை உருவாகியுள்ளது.

"எதிர்த்துக் கேட்டால் எம்மை சரியில்லை என்று இன்றும் எமக்கு எதிராக நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றனர். இந்த நிலையில், இந்த அரசாங்கத்தை மக்கள் வெறுத்து வருகின்றனர்.

"எதிர்வரும் காலத்தில் நாட்டில் உள்ளூராட்சி மன்ற சபைகளின் தேர்தல்களை நடத்தப் போவதாக தெரிவிக்கின்றனர். ஆனால், இவர்களின் தேர்தல் முறையானது பழைய ஆடைத் தொழிற்சாலை போல் அமைகின்றது.

"எதிர்வரும் காலத்தில் எந்தத் தேர்தலை நடத்தினாலும் அந்தத் தேர்தலில் இவ் அரசாங்கத்துக்கு எதிரான அனைவரையும் ஒன்றிணைத்து, தேர்தல் வெற்றியை அடைவோம்.

"அதேபோன்று தேர்தலில் வெற்றியீட்டி, இந்த நாட்டில் புதிய அரசாங்கத்தை அமைத்து, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிக் காட்டுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதவி விலகல் விவகாரம் அமைச்சர் ரவி நிராகரிப்பு



இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை, அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியிருப்பதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய வங்கி பிணை முறி விற்பனையில் இடம் பெற்ற முறை கேடுகளுடன் தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் நிலையிலேயே, ரவி கருணாநாயக்கவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அறிவுறுத்தலை வழங்கியிருப்பதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

தொடர்ந்தும் அமைச்சராகப் பதவி வகித்தால், அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் கூட பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும். எனவே, அமைச்சர் பதவியை விட்டு விலகுவதே நல்ல தீர்வாக இருக்கும் என்று, அமைச்சரிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வாழ்வின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை இரவு அலரிமாளிகையில் நடந்த விருந்துபசாரத்தின் போதே, ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு தமக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியிருப்பதாக வெளியான செய்திகளை அமைச்சர் ரவி கருணாநாயக்க நிராகரித்துள்ளார்.

பதவியை விட்டு நான் விலக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக வெளியாகிய அறிக்கைகள் மற்றும் வதந்திகள் முற்றிலும் முட்டாள்தனம் என்று அவர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொள்ளையடித்தவர்களே நம்பிக்கையில்லா தீர்மானத்தினைக் கொண்டு வந்துள்ளனர்

## ஜே.வி.பி. தலைவர் அநுர விசனம்



(கொழும்பு)

கடந்த ஆட்சியில் கொள்ளையடித்தவர்களே இன்று ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினைக் கொண்டு வந்துள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கூட்டு எதிர்க்கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேடிக்கையானது.

ரோஹித அபேகுணவர்த்தன, காமினி லொக்குகே, மகிந்தானந்த அளுத்கமகே, நாமல் ராஜபக்ஷ, எஸ்.எம்.சந்திரசேன, விம்ல் வீரவன்ச போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் 'கொள்ளையடிப்புக்களில் ஈடுபட்டவர்கள். கொள்ளையடித்தவர்கள் இணைந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளமையே வேடிக்கையானது" என அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரச வைத்திய அதிகாரிகள் புதனன்று முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

மாலபே தனியார் வைத்திய கல்லூரியை மூடுமாறு வலியுறுத்தும் வகையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அடுத்த வாரம் ஏனைய தொழிற்சங்கங்களை சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை இந்த கலந்துரையாடலை முன்னெடுக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளர் மருத்துவர் நவீன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதியும் பிரதமரும் கவனம் செலுத்தாதமையினால் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானிக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (இ-7)

# இருதய மாற்று சிகிச்சை செய்த நோயாளியின் தற்போதைய நிலை

இலங்கையின் வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய அறுவை சிகிச்சை ஒன்று அண்மையில் கண்டி வைத்தியசாலையில் இடம் பெற்றது.

கண்டி வைத்தியசாலையில் முதன் முறையாக இடம்பெற்ற இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண், தற்போது சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார்.

அநுராதபுரத்தை சேர்ந்த 34 வயதுடைய பெண்ணுக்கே இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

அவரது இருதயம் நூற்றுக்கு 12 வீதம் செயலற்று காணப்பட்டதாகவும், மூளைச் சாவடைந்த 22 வயதுடைய இளைஞனின் இதயம் அவருக்கு பொருத்தப்பட்டதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அந்த நோயாளியின் நலன் விசாரிப்பதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அங்கு சென்றிருந்தார். முதன் முறையாக குறைந்த வசதியின் கீழ் கண்டி வைத்தியசாலையில் இருதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் வைத்தியர் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த அறுவைச் சிகிச்சை, இலங்கையின் வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லாட்சி அரசாங்கம் தேர்தலுக்கு முகம்கொடுக்கத் தயங்குகின்றது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க தயங்குகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பின் போது தாம் வாக்களிக்கவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ரவி கருணாநாயக்கவிற்கு மட்டுமல்லாது அரசாங்கத்திற்கு எதிராகவும் வாக்களிக்க தாம் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் முதன் முறையாக நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தூதுவர்களாக அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள்

## நல்லிணக்க அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலும் வழிகாட்டலிலும் தேசிய ஒன்றிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் திருகோணமலையில் இந்து கலாசார மண் டபத்தில் இடம்பெற்ற அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான நல்லிணக்க மேம்பாட்டு நிகழ்ச்சியில் 1000 இற்கும் மேற்பட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகம, முதலமைச்சர் நசீர் அகமட், பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்துல்லா மகறுவ், தாபீக், துரைரட்ணசிங்கம் மற்றும் கிழக்கு மாகாண அமைச்சர், ஆரியவதி கலபதி ஆகியோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வின் நோக்கம் அறநெறிபாட சாலை ஆசிரியர்களுக்கு நல்லிணக்கம் தொடர்பான அறிவினை வழங்குவதுடன் அவர்களைச் சமாதான தூதுவர்களாகவும் மாற்றங்களை ஏற்படுத்துபவர்களாகவும் மாற்றுவதற்கான மனோ நிலை, ஆற்றல் என்பவற்றை வழங்குவதாகும். இதன் மூலம் வேறுபட்ட மதங்கள், இனங்கள், மொழிகள் மற்றும் பிராந்திய வேறுபாடுகளை இணங்கண்டு பல்லினத் தன்மைக்கு மதிப்பளித்து இலங்கையர் என்ற அடையாளத்துடன் வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதாகும் என தேசிய ஒன்றிணைப்பு மற றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார். சமயம் மக்களின் மனதில் பரவலான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி படைத்ததாகும். மதவாதம், இனவாதம், மொழி வாதம், பிரதேசவாதம் என்பவற்றை மனித மனங்களிலிருந்து அகற்றி மாற்று சமயங்கள் பற்றிய அறிவினை பெற்று அறநெறி கல்வி மூலம் நல்லிணக்கமும் ஒழுக்கமும் உடைய சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இந்நிகழ்வில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் அங்கீகரிக்கப்பட்டமை, தேசிய கீதம் இரு மொழிகளிலும் இசைக்கப்படுகின்றமை, தேசிய நல்லிணக்க கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டமை, மாவட்ட மட்டத்தில் நல்லிணக்க குழுக்கள் அமைச்சரவை அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்டமை, தேசிய நல்லிணக்கத்திற் கும் ஒருங்கிணைப்புக்குமான வாரம் பிரகடனப்படுத்தப்பட்டமை,நல்லிணக்க நட்புறவு பாடசாலைகள் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றமை, நல்லிணக்கப் பொறிமுறை மற்றும் நிலை மாற்ற நீதி என் பன தொடர்பான நிறுவன கட்டமைப்பு உருவாக்கப்பட்டமை, என்பன தேசிய நல்லிணக்கம் தொடர்பான அரசினால் முன்னெடுக்கப்பட்ட மைல்கற்களாக இனங்காணப்பட்டதாக தேசிய ஒன்றி ணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரி வித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் குறிப்பிடுகையில்,அரசியல்யாப்பு மறுசீரமைப்பு மூலம் அதி காரங்களைப் பரவலாக்கி நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தலாம் எனக் குறிப்பிட்டார்.

வெறுப்புணர்வுகளை தூண்டும் பேச்சுக்களை தடை செய்து நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் நிரந்தரமான நல்லிணக்கத்தையும் சமா தானத்தினையும் ஏற்படுத்த முடியும்.

இந்தநிகழ்வில் தேசிய நல்லிணக்க பிரகடனம்அனைவராலும் வாசிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. நான்கு மதங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அறநெறி மற்றும் மனித விழுமியங்கள் மற்றும் ஏனைய மதங்களைப் பற்றிய அறிமுகம் பாடசாலை சமயக் கல்வியில் உள்ளடக்கப்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது. (இ-7)

# இந்த அரசு ஆட்சிக்கு வந்தது முதல் இராணுவ் வேட்டை தொடர்கின்றது

## ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் புகார்



(கொழும்பு)

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இராணுவத்தினர்களை வேட்டையாடி வருவதாக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

குவைத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போது இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவுமில்லை, போர்க் குற்றங்களை செய்ய உதவி வழங்கவும் இல்லை.

இந்த நிலையில், இராணுவத்தை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்டு வருவதாக மேஜர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினர் பெருமளவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை,சிறுபான்மை மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்படுகின்றது.

இது அபாயகரமான நிலையாகும் என்றும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.(இ-7)

# தகவல் அதிகாரிகள் தொடர்பான விபரங்கள் இணையத்தளத்தில்

(கொழும்பு)

அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகம் உட்பட அரச நிறுவனங்களுக்கு தகவல் அதிகாரிகளை நியமிக்கும் பணியில் 95 சதவீதமானவை பூர்த்தியடைந்துள்ளன.

இது தொடர்பாக தகவல் அறியும் பேரவையின் பணிப்பாளர் நாயகம் ஜயதிஸ்ஸ ரணசிங்க தெரிவிக்கையில், தகவல் அறியும் அதிகாரியொருவர் இல்லாத நிறுவனத்தின் தலைவர் உரிய அதிகாரியொருவரை நியமிக்க கடமைப்பட்டுள்ளதாகவும் தகவல் அதிகாரிகள் தொடர்பான விபரங்களை இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். அதன் முகவரி www.rti.gov.lk என்பதாகும். தகவல் அறியும் சட்டத்தை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர்வலியுறுத்தினார்.

தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்தும் தெற்காசிய நாடுகளுக்கு மத்தியில் இலங்கை முன்னேறியுள்ளது. இலங்கை இதில் 80 சதவீத முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. நிறுவனங்களில் நியமிக்கப்பட்டுள்ள தகவல் அறியும் அதிகாரிகளுக்கு, தகவல் அறியும் விடயங்களுடன் தொடர்புடைய 200 விண்ணப்பங்கள் கிடைப்பதாகவும் தகவல் அறியும் பேரவையின் பணிப்பாளர் நாயகம் ஜயதிஸ்ஸ ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

யாழ். மண்ணில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்
பிரபல தென்னிந்திய பாடகர் கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்
இன்னிசை பாடிவரும்...
மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி
மாலை 6.00 மணிக்கு
இம் மாதம் ஆகஸ்ட் 12 இல்
(006)



நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்
டிக்கெட் கிடைக்குமிடங்கள்:
➤ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 021 222 6693
➤ த போன் சொப், நெல்லியடி, 077 285 0285
யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)
Event Management C.A.C
Tel: 077 550 4910
டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

### ஹற்றனில் மண்சரிவு

ஹற்றன் டிக்கோயா நகரசபைக்குட்பட்ட சமனலகம பகுதியில் நேற்றுக் காலை 6.45 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவின்காரணமாக வீடு ஒன்று சேதமாகியுள்ளது.

தற்போது மலையகப் பகுதிகளில் நிலவி வரும் கடும் மழையுடனான காலநிலை காரணமாக பல்வேறு பிரதேசங்களிலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில், குறித்த வீட்டின் சமையலறை மற்றும் ஒரு அறையும் பகுதியளவில் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு வீட்டில் வசித்து வந்தவர்கள் எந்தவித பாதிப்புமின்றி தப்பியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த வீட்டில் உள்ளவர்கள் அனைவரையும் தற்காலிகமாக வேறு இடங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி. செல்வசபாபதிப்பிள்ளை சொர்ணலட்சுமி



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.திருமதி.செல்வசபாபதிப்பிள்ளை சொர்ணலட்சுமி 05.08.2017 சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு-நீலாதாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் முத்துக்குமாரசாமி-சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகளும் சுசீலா, நிர்மலா, லீலா, மேகலா, கௌரி, சிறிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.08.2017 நாளை செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8 மணியளவில் சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டித் தெரு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(இ-9272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)



(பெயரின் முதல் எழுத்துக்கள்: போ, ஜ, ஜி, ஜீ, ஜே, ஜோ, க, கா, கி உள்ளவர்களுக்கும்)

நம்பிக்கைக்குரிய நண்பர்களை மட்டும் தன்னுடன் வைத்துக் கொள்ளும் மகர இராசி நேயர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த இராகுவும், இரண்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த கேதுவும், ஜூலை மாதம் 27ஆம் தேதி மாற்றம் பெறுகிறார்கள். வருகிற மாற்றம் நல்ல மாற்றம் தானா? நமது இராசிக்கு கேது வருகிறாரே? என்றெல்லாம் நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கள் இரர்சியை நாடிவரும் கேதுவையும், சப்தம ஸ்தானத்திற்கு வரும் இராகுவையும் வரும் நாளிலேயே கொண்டாடி மகிழ்வதோடு வந்த ஒரு மாதத்திற்குள் நாகசாந்திப் பரிகாரங்களையும், அனுகூலம் தரும் ஸ்தலங்களில் சென்று செய்து வழிபட்டு வந்தால் தேகநலன் சீராகும் செல்வ நிலை உயரும்.

மகர கேது, மறக்க முடியாத சம்பவங்களை எல்லாம் நடத்திக் காட்டுவார். ஞானத்தை விருத்திப்பார். தான தர்மங்கள் செய்ய வழிவகுத்துக் கொடுப்பார். இடமாற்றங்களால் இனிய மாற்றங்களை வரவழைப்பதோடு, எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலவும் வழிகாட்டுவார்.

ஞானகாரகன் என்று போற்றப்படு பவர் கேது பகவான். அவரது ஆதிக்கம் வரும் பொழுது விநாயகப் பெருமானை வழிபட்டால் வெற்றிகள் கிடைக்கும். எனவே கேது வந்த நாள் முதல் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், அனுமனையும் விடாது வழிபட்டு வாருங்கள். சதுர்த்தி விரதமிருந்து ஆனை முகனுக்கு அருகம்புல் மாலை சூட்டி வழிபாடு செய்யுங்கள்.

செப்டெம்பரில் வரும் குருப் பயர்ச்சியால் 10இல் வரும் குரு, பதவி மாற்றங்களைக் கொடுக்கலாம். அதன்பிறகு டிசெம்பர் மாதம் வரப்போகும் சனிப் பெயர்ச்சியால் ஏழரைச் சனி தொடங்குகிறது. இதில் இரண்டாவது சுற்று நடைபெறுபவர்களுக்கு இனிய பலன் கிடைக்கும். வருமானம் பெருகும். வளர்ச்சி கூடும். தற்சமயம் குறிப்பாக சப்தம இராகு குடும்பத்தில் சச்சரவுகளை ஏற்படுத்தாமல் இருக்க விட்டுக்கொடுத்துச்செல்வது நல்லது.

சிந்தித்து செயல்பட வைக்கும் ஜென்ம கேது!

ஜென்ம இராசிக்கு ஜூலை 27ஆம் தேதி கேது வருகிறது. இதற்கு முன்பு விரயஸ்தானம் எனப்படும் 12ஆம் இடத்தில் கேது சஞ்சரித்து வந்தார். அப்பொழுது நிறைய விரயங்களைக் கொடுத்திருக்கலாம். அந்த நிலை இனி மாறப்போகிறது. கேது இருக்கும் வீட்டிற்கு அதிபதி எது என்பதைப் பார்க்க வேண்டும். அதற்குரிய பலன்தான் உங்களுக்கு நடைபெறும்.

கேது சனியின் வீட்டில் இருப்பதால் சனியின் ஆதிக்க காலத்தில் உங்களுக்கு என்னவெல்லாம் பலன் கிடைக்குமோ அவற்றையெல்லாம் கேது பகவான் வழங்குவார்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது சனி உங்கள் இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்குவதால் உங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் சிறிது நேரத்தில் அவை மாறிவிடும். ஆரோக்கியத்தில் சிறுசிறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். களைப்பு வரும்போது ஓய்வு எடுத்துக்கொண்டு பணியாற்றினால் ஆரோக்கியம் சீராக இருக்கும்.

ஜென்மத்தில் கேது வந்தால்
சிறுசிறு தொல்லை உண்டு!
நன்மைகள் நடப்பதற்கு
நாடுவீர் ஆலயத்தை! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பதைப் போல கேது திசை, அல்லது கேதுவின் ஆதிக்கம் வருவதற்கு முன்பே உங்களுக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ஆலயம் ஆலயமாகச் சென்று வழிபாடுகளை நடத்திக் கொண்டிருப்பீர்கள். அதே போல் இப்பாழுது கேது சனி வீட்டில் சஞ்சரிப்பதால் சனிக்கிழமையன்று கேதுவிற்குரிய தெய்வமான விநாயகப் பெருமானை முறையாக வழிபாடு செய்ய வேண்டும்.

சுபவிரயங்கள் உங்களுக்கு அதிகரிக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ளலாமா என்று சிந்திப்பீர்கள். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதால் அவர்கள் மூலமாகவும் நீங்கள் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

உங்கள் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகங்களையும் ஒருமுறை புரட்டிப் பாருங்கள். ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு மகர இராசி அமையுமேயானால் அவர்கள் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். மனஅமைதிக் குறைவு ஏற்படாமல் இருக்க பகை பாராட்டாமல் நடந்து கொள்ளுங்கள். இதற்கிடையில் குருப்பெயர்ச்சியின் விளைவாக செப்டெம்பர் 2ஆம் தேதிக்கு மேல் உங்கள் இராசிக்கு 2ஆம் இடம், 4ஆம் இடம், 6ஆம் இடம் ஆகிய ஸ்தானங்களை குரு பார்க்கப் போவதால் மலை போல் வந்ததுயர் பனி போல விலகும். நிலையான வருமானத்திற்கு வழி செய்வீர்கள்.

கல்யாண வாய்ப்புகள் கைகூடும். சந்தர்ப்பங்களை நழுவ விடாதிருப்பது நல்லது. வீடு மாற்றம், இட மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம் போன்றவற்றை ஏற்றுக் கொள்வதன் மூலம் மனநிம்மதி கிடைக்கும்.

சப்தம ராகுவின் பலன்

இதுவரை உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரித்து இராகு பகவான் இப்பொழுது 7ஆம் இடத்திற்கு வருகிறார். 3ஆம் இடம், 11ஆம் இடம் ஆகிய இடங்களில் தன் பார்வையைச் செலுத்துகிறார். அதன் மூலமாக சில நல்ல பலன்களையும் வாரி வழங்குவார். கடல் தாண்டிச் செல்லும் யோகம், தொழில் மாற்றச் சிந்தனை குடும்பப் பிரச்சினைக்குத் தீர்வு, வெளிநாட்டு வேலை, தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் நிலை போன்றவற்றில் எல்லாம் சப்தம இராகு தனது பார்வை பலத்தால் உங்களுக்கு வழங்குவார்.

கடகத்தில் சஞ்சரிக்கும் இராகு 9ஆம் இடத்தைப் பார்ப்பதால் பூர்வீகச் சொத்துகளில் இருந்த தகராறுகள் அகலும். புதிய வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். சொத்துகள் சம்பந்தமாக பஞ்சாயத்துகள் நடைபெற்றால் அதில் அனுகூலங்கள் கிடைக்கும். பங்காளி பகை மாறும். உடன்பிறந்தவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

பிதுரார்ஜித சொத்துகளில்உங்களுக்கு கிடைக்கவே வண்டிய பங்குமுறைப்படி கிடைக்க வழிபிறக்கும். வெளிநாட்டில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். அதன் மூலம் பொருளாதார நிறைவு ஏற்படும்.



இக்காலம் இனிய காலமாகும். இராசி நாதனின் காலில் இராகு உலா வரும் பொழுது ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். வருமானம் திருப்தி தரும். அரசியல் ஈடுபாடு உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். நட்பால் நல்ல காரியம் நடைபெறும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும். வீடு மாற்றச் சிந்தனைகள் ஒரு சிலருக்கு உருவாகும்.

குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.2.2019 வரை)

இக்காலம் ஒரு இனிய காலமாகும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முன்னேற்றம் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். சகோதர வர்க்கத்தினரால் சகாயம் உண்டு. மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும் நேரமிது. குழந்தைகளின் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும்.

## மகரகேதுவின் ஆதிக்கம்! மனதில் நினைத்ததை சாதிக்கும்!




பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு இராகு-கேது பெயர்ச்சி கூடுதல் கவனத்துடன் செயல்படுவதன் மூலமே நன்மைகளைப் பெற இயலும். ஜென்ம கேதுவால் மனக்குழப்பம் அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதே குழப்பங்களிலிருந்து விடுபட வழிவகுக்கும். மருத்துவச் செலவு கூடுதலாகும். குடும்ப உறவுகள் சுமாராக இருக்கும். கணவன்-மனைவிக்குள் அனுசரிப்பு அதிகம் தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. சதுர்த்தி விரதம் சங்கடங்களைப் போக்கும். இராகு- கேதுக்கள் வழிபாடும், தானிய தானங்கள் செய்து ஹோமங்களை செய்வதன் மூலமும் நற்பலன்களைப் பெற இயலும்.

வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

ஜென்ம கேதுவால் நன்மை கிடைக்கவும், தொழில் வளம் பெருகவும், சப்தம இராகுவால் சங்கடங்களில் இருந்து விடுபடவும், தனவரவு திருப்தி தரவும் இராகு-கேதுக்களுக்குரிய பிரீதி செய்வதோடு வடக்கு நோக்கிய விநாயகரை சனிக்கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 3.4.2018 வரை)

இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாகும். படித்துப் பட்டம் பெற்றும் வேலையில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல வேலை கிடைக்கப் போகின்றது. சம்பள உயர்வு வரவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கப் போகின்றது. கடன் சுமை குறையும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (4.4.2018 முதல் 11.12.2018 வரை)

பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 29.11.2017 வரை)

இக்காலத்தில் சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. சொந்த பந்தங்களால் நன்மை உண்டு. துணிந்து நீங்கள் எடுத்த முடிவைக் கண்டு உறவினர்கள் ஆச்சரியப்படுவர். பட்டம், பதவிகள் வந்து சேரும் பஞ்சாயத்துகள்நல்ல முடிவிற்கு வரும். நிலபுலன்களால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். அங்காரக வழிபாடு இக்காலத்தில் அல்லல்களை அகற்றும்.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது (30.11.2017 முதல் 7.8.2018 வரை)

இக்காலத்தில் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். பணப்புழக்கத்திலும் தடை ஏற்படும். ஒரு தொகை செலவான பின்னரே அடுத்த தொகை வந்து சேரும். எந்த முடிவையும் தீர்க்கமாக எடுக்க முடியாது. ஆரோக்கியத் தொல்லை அகல அதிகச் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகலாம். நாணயப் பாதிப்பு ஏற்படாத விதம் நடந்து கொள்வது நல்லது.

சூரியன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.8.2018 முதல் 12.2.2019 வரை)

இக்காலத்தில் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் உங்களுக்கு அனுகூலமாக நடந்துகொள்வர். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். அரசாங்க வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா பெரியவரே! எடுத்தாரா...? எப்போது...?

'நீரில் நீந்திக் கொண்டிருக்கும் மீன் எப்பொழுது நீரை அருந்தும் என்று அறிவது எவ்வளவு கடினமோ, அது போல அரச அதிகாரிகள் எப்பொழுது கையாடல் செய்கிறார்கள் என்பதை அறிவதும் கடினம்' என்கிறார் ஐயா பெரியவர் !

ஐயா 'இங்கே நிறைய இருக்கிறது, நாம் எடுப்பது யாருக்கும் தெரியப் போவது இல்லை' எனும் எண்ணத்தினால் எடுக்கலாமா? எடுக்கக் கூடாதென்பது அடிப்படைக் கொள்கையாக இருக்க வேண்டுமல்லவா? நேர்மையாக இருப்பதில் சின்ன விடயம், பெரிய விடயம் என்றெல்லாம் இருக் கிறதா என்ன? 'சில இடங்களில், சில நேரங்களில் மட்டும் கொஞ்சம் அப்படி இப்படி இருப்பேன் என்றால் எப்படி?' குண்டூசி, காகிதம் போன்ற அலுவலகப் பொருட்களை வீட்டு உபயோகத்திற்கு எடுத்துச் செல்வதை பலர் தவறாக நினைப்பதே இல்லை!


அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதும் ஒரு வகையில் இலஞ்சத்திற்கு இணையானது தானே? குறித்த நிறுவன பிரதேச முகாமையாளர் ஒருவர். குடும்பம் வவுனியாவில், பணி கிளிநொச்சியில். 3மாதங்களுக்கு ஒரு முறை தன் பொறுப்பில் இயங்கும் 10 கிளைகளை ஆய்வு செய்ய வேண்டும். பக்கத்திலிருக்கும் பூநகரிக்குப் போகவே மாட்டார் அவர்! ஆனால் வவுனியா செல்லும் வழியில் மல்லாவி, ஓமந்தை என மாறிமாறி விஜயம்செய்து, அங்கே தலையைக் காட்டி விட்டு, தன் வீட்டிற்கு ஓடி விடுவார்!

விதிகளின்படி அதில் தவறில்லை என்றே தோன்றலாம். ஆனால் தர்ம நியாயப்படி? பொதுப் பணம் என்றால் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பது அரசாங்க அதிகாரிகளிடம் மட்டுமில்லை, பொது வாழ்வில் ஈடுபடும் யாரிடமும் இருக்க வேண்டுமில்லையா?

'இது பங்குதாரரின் பணம், நாம் அதன் காப்பாளர். அதை வீணடிக்கக் கூடாது' எனும் அணுகுமுறை அந்த நிறுவனங்களின் இயக்குநர்களிடமும் இருக்க வேண்டுமில்லையா?

எனது நண்பர் ஒருவர் புதிதாய் கம்பனி தொடங்கினார். கொழும்பு சென்றால், ஞாயிற்றுக்கிழமைகளில் சாதாரண ஹோட்டலில்தான் தங்குவார். திங்களன்று வர்த்தகம் குறித்துப் பேச வேண்டுமெனில், நட்சத்திர விடுதிக்கு மாறிக் கொள்வார்!

அவர் பொறுப்பாய் இருக்கும் கோவிலுக்குப் பொது நிதியிலிருந்து பொருட்கள் வாங்கினால் கூட, விடாமல் பேரம் பேசுவார்! தன் பணமோ, பொதுப் பணமோ அவரது அணுகுமுறை ஒரே மாதிரியாகத் தான் இருக்கும்!



'நேர்மை என்பது நாம் கழிவறையை உபயோகப்படுத்தி வெளிவரும் பொழுது, அடுத்து வருபவர் நலன் கருதி தண்ணீர் ஊற்றி சுத்தமாக வைத்து விட்டு வருவது' என்பார் அவர்!

இந்தியா முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம், ஒரு முறை தமிழகத்தின் கோயம்புத்தூர் சௌபாக்யா நிறுவனத்தின் விழா ஒன்றிற்குச் சிறப்பு விருந்தினராகச் சென்று இருந்தாராம். விழாவில் நினைவுப் பரிசாக அவருக்கு அவர்களது தயாரிப்பான மாவரைக்கும் இயந்திரத்தைப் பெருமையுடன் அளித்தார்களாம்.

தனக்கு அது உபயோகம்தான் என்று பெற்றுக் கொண்ட கலாம், உடனே அதற்கான விலையான ரூ 4,850க்கு ஒரு காசோலை எழுதிக் கொடுத்து விட்டாராம்!

ஆனால், நிறுவனத்தார் அந்த காசோலையைப் பணமாக்க மனமில்லாமல் ஒரு பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்துக் கொண்டார் களாம்! வங்கியில் காசோலை வரவில்லை எனத் தெரிந்து கொண்ட பின், குடியரசு மாளிகையிலிருந்து அதனைக் காசாக்குமாறு தொலைபேசி அழைப்புகள் வந்தனவாம்.

அந்நிறுவனத்தினர் வேறு வழியின்றி காசோலையை வங்கிக்கு அனுப்பி பணம் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

உலகின் வெவ்வேறு நாடுகளில் உள்ள லஞ்சம் குறித்து, பெர்லினைத் தலைமையிடமாகக் கொண்ட Transperancy International எனும் நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது. உலக வங்கியிலிருந்தும், உலகப் பொருளாதாரப் அமைப்பிலிருந்தும், மற்ற நிறுவனங்களிலிருந்தும் புள்ளி விபரங்களைச் சேகரித்து, அவர்கள் இந்த மதிப்பீட்டு அட்டவணையைத் தயாரிக்கிறார்களாம்.

இலஞ்சமே சுத்தமாக இல்லையென்றால் 100க்கு 100 புள்ளிகள். அவர்களின் 2016ன் அறிக்கையின் படி நியூசிலாந்தும் டென்மார்க்கும் 90 புள்ளிகளுடன் முதலிடத்தில்!

ஐயா, அதில் இலங்கை 36 புள்ளிகளுடன் 95-வது இடத்தில் உள்ளது. அத்துடன் தரவரிசையில் இந்தியாவுக்கும் சீனாவிற்கும் பிரேசிலுக்கும் 40 புள்ளிகள்! அவர்களும் எமக்கு அருகிலேயே. உண்மை என்னவென்றால் இது உலகளாவிய பிரச்சினை! தனி மனிதனின் கொள்கை, கோட்பாடு மாறும் வரை எங்கும் இதே கதை தான்!

'நேர்மையின் பலன் வெளி உலகம் சம்பந்தப்பட்டது இல்லை. அது பெரும்பாலும் ஒருவரது உள்மனம் சார்ந்தது. சுய மரியாதை, கௌரவம், தான் செய்தது சரியே எனும் தன்னம்பிக்கை, பெருமை ஆகியவை தான் அவை' என்று அமெரிக்க சமூக சேவகி லாரா சொல்கிறார்!

அனுபவித்துப் பார்த்தால்தான் அது புரியும்!




# அப்பிள் பங்குகள் மூலம் ரூ.15 ஆயிரம் கோடி லாபம்

அப்பிள் நிறுவனத்தின் பங்குகள் மூலம் ஒரே நாளில் வாரன் பஃபெட்டுக்கு 100 கோடி டொலர் (ரூ.15 ஆயிரம் கோடி) ஆதாயம் கிடைத்துள்ளது. உலக அளவில் மிகப் பெரிய பங்கு முதலீட்டாளரான பஃபெட் அப்பிள் நிறுவனத்தில் 2.5 சதவீத பங்குகளை வைத்துள்ளார். இந்த பங்குகள் மூலம் பஃபெட்டுக்கு ஒரே நாளில் 100 கோடி டொலர் ஆதாயம் கிடைத்துள்ளது.

பஃபெட்டின் ஹாத்வே நிறுவனத்தின் வசம் அப்பிள் நிறுவனத்தின் 13.5 கோடி பங்குகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஹாத்வே நிறுவனத்துக்காக ஜனவரி மாதத்தில் 7.6 கோடி பங்குகளையும் வாங்கியுள்ளார்.

அப்பிள் நிறுவனம் தனது 3-வது காலாண்டு முடிவை கடந்த செவ்வாய்கிழமை அறிவித்தது. இதில் நிறுவனம் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. இதன் காரணமாக புதன்கிழமை வர்த் தகத்தில் அப்பிள் பங்குகள் 5.11 சதவீதம் உயர்ந்து 157.72 டொல ராக இருந்தது. குறிப்பாக ஒரு பங்கு 7.67 டொலர் விலை அதிகரித்தது. இதன் காரணமாக பஃபெட் டுக்கு இந்த ஆதாயம் கிடைத்துள்ளது.



தொழில்நுட்பத்துறை பங்குகளில் முதலீடு செய்வதை தவிர்க்க விரும்புதாக பபெஃட் ஏற்கெனவே கூறியிருந்தார். ஆனால் அப்பிள் நிறுவன பங்குகளை 2016ம் ஆண்டில் வாங்கினார். மேலும் கடந்த ஜனவரி மாதத்தில் 7.6 கோடி பங்குகளை வாங்கியுள்ளார்.

அப்பிள் முதலீட்டுக்கு பிறகு பேசிய வாரன் பஃபெட், ஆப்பிள் தயாரிப்புகள் மக்களிடம் மிகவும் உணர்வு பூர்வமாக இணைந்துள்ளன. அவை பயன் அளிக்கின்றன என்பதால்தான் மக்கள் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர் என்றார்.

ஜூன் காலாண்டில் 4.1 கோடி ஐபோன்களை நிறுவனம் விற்பனை செய்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,666.05 | 6,567.43 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,822.92 | 3,784.51 ⇩ |
| புரள்வு (ரூபா.மில்.) | | 3,494.105 |

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

**உயர்வடைந்த பங்குகள்(ரூ):** பிசி ஹவுஸ்(0.20), சிஜஎப்எல்(1.20), றோயல் பாம்(25.80), ரேட் பின்னான்ஸ்(44.70), ரேஜம் ஸற்னர்ஸ்(3.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** கெல்சே(42.00), ஆதாம் இன்வெஸ்மன்ட் (0.50), சிரஸ் கிக்கடுவ(14.10), உடபுசலாவ(31.00), டிப்பிட் புறடக்ஸ்(97.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# 2017 முதல் அரையாண்டில் பங்குச்சந்தை நடவடிக்கை உறுதியாக பதிவு

2016 -ம் ஆண்டில் மந்தமான பெறுபேற்றினை பதிவு செய்த கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் நடவடிக்கைகள் 2017-ம் ஆண்டு முதலாம் அரையாண்டு வரையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை பதிவு செய்துள்ளது.

அந்த வகையில் கடந்த அரையாண்டு காலத்தில், அனைத்துப் பங்கு விலைச்சுட்டி (ASPI) 8.23% உறுதியான வளர்ச்சியினை பதிவு செய்து, யூலை 17-ம் திகதி 6741.07 புள்ளிகளாகக் காணப்பட்டது. பாரிய மூலதனம் மற்றும் திரவத் தன்மை நிறைந்த பண்புசார் பட்டியற்படுத்தப்பட்ட 20 கம்பனிகளை உள்ளடக்கிய S&P SL 20 விலைச் சுட்டி 11.03% வளர்ச்சியினை முதல் அரையாண்டில் பதிவு செய்து, ஜூலை 17-ம் திகதி 3882.14 புள்ளிகளாகக் காணப்பட்டது. 2016 மற்றும் 2015 ஆண்டுகாலப் பகுதிகளில் முறையே 9.66%, 5.54% வருடாந்த வீழ்ச்சியினை வெளிப்படுத்திய அனைத்துப்பங்கு விலைச்சுட்டி 2017-ம் ஆண்டில் வளர்ச்சியினை பதிவு செய்து கொண்டிருக்கின்றது.

2016ஆம் ஆண்டு 737.2 மில்லியன் ரூபாயாக காணப்பட்ட நாளாந்த சராசரி புரள்வு, 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு சராசரியாக ரூபா. 911 மில்லியன் பதிவு செய்து, மொத்த வியாபார நடவடிக்கைகளும் துரிதமடைந்துள்ளது.

வெளிநாட்டுச் செயற்பாட்டுத் தூண்டல் 2017-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் தொடர்ச்சியான 24 வாரங்களுக்கு தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலினைப் பதிவு செய்து, சந்தை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் முதலீட்டுக்கான ஆர்வத்தினை தன்வசப்படுத்தி இருக்கின்றது. குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக 2017-ம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்கான வெளிநாட்டுக் கொள்வனவு ரூபா 62.6 பில்லியன் ஆகப்பதிவு செய்து, 2016ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டு ரூபா 31.5 பில்லியனைக் காட்டிலும் இருமடங்காகப் பதிவு செய்து நிதியாண்டுகளின் அரையாண்டிற்கான உச்ச வரம்பாக அமைந்துள்ளது.



2017ஆம் ஆண்டில் தற்போது வரை தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் ரூபா 23 பில்லியன் பதிவு செய்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ஓர் பாரிய அடைவாகும். குறிப்பாக 2016-ம் ஆண்டு ரூபா 383.5 மில்லியன் முதலீட்டு உட்பாய்ச்சலினைப்பதிவுசெய்திருந்தது. மாறாக 2015இல் ரூபா 5.3 பில்லியன் வெளிப்பாய்ச்சலாக அமைந்திருந்தது. 2012-ம் ஆண்டு வரலாற்றில் அதிகூடிய தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் ஆண்டாக அமைந்திருந்தது. 2012இல் முதல் அரையாண்டில் ரூபா 23.2 பில்லியன் பதிவாகியிருந்ததுடன், அந்த நிதியாண்டு முடிவில் உட்பாய்ச்சலாக ரூபா 38.6 பில்லியன் பதிவு செய்துள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நிலைமை 2016 மற்றும் 2015-ம் ஆண்டுகளில் முறையே 42.0%, 34.4% ஆகக் காணப்பட்ட மொத்த சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு 2017-ம் ஆண்டில் 47.2% வளர்ச்சியினை வழங்கியிருந்தது.

பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடுகையில் கவர்ச்சிகரமான ஓர் விலை உழைப்பு, பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் அதிகரித்த இலாபம் மற்றும் ஒப்பீட்டளவில் விலைச்சுட்டிகளின் அசைவு மற்றும் உறுதியான செயலாற்றுகை என்பன வெளிநாட்டு முதலீடுகள் இலங்கை நோக்கி குவிக்கப்பட்டதற்கான அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 151.34 | 155.14 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 198.07 | 204.77 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 178.67 | 185.36 |
| சுவிஸ் பிராங் | 155.30 | 161.51 |
| கனேடிய டொலர் | 119.76 | 124.46 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.29 | 124.58 |
| சிங்கப்பூர் டொலர் | 110.96 | 115.03 |
| ஜப்பான் யென் | 1.36 | 1.41 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.40 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.78 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவளைக் குட்டிச் சீடன்



முட்டாளும் மூடனும் தவிர பரமார்த்த குருவும் மற்ற சீடர்களும் ராஜ வீதியில் காத்திருந்தனர். அந்த நாட்டு மன்னன் தேரில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தான். தங்கள் அருகே தேர் வந்ததும் கையில் தயாராக வைத்திருந்த செத்துப் போன தவளையையும் ஓணானையும் தேரின் சக்கரத்தில் போட்டான் மட்டி. அதன் மீது சக்கரம் ஏறி நகர்ந்ததும், நசுங்கிப் போன தவளையையும் ஓணானையும் தூக்கி வந்தான் மடையன்.

பரமார்த்தர் தேருக்கு முன்னால் சென்று ஐயோ! என் சீடர்களைக் கொன்று விட்டாயே! இது தான் நீ குடிமக்களைக் காப்பாற்றும் முறையா? என்று கூச்சலிட்டார்.

மட்டியும் மடையனும் சேர்ந்து கொண்டு ஐயோ கொஞ்ச நேரத்துக்கு முன்னால் எங்களோடு சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தீர்கள். அதற்குள் இப்படி நசுங்கிக் கூழ் கூழாக ஆகிவிட்டீர்களே! என்று ஒப்பாரி வைத்தனர்.

அரசனுக்கும் அமைச்சர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. யாரைக் கொன்றேன் எனக் கேட்டான் மன்னன்.

என் அருமையான சீடர்களான முட்டாளையும் மூடனையும் நீ தான் தேர் ஏற்றிக் கொன்று விட்டாய்! என்று குற்றம் சாட்டினார் குரு. அப்படியானால் எங்கே அவர்கள் உடல்கள்? என்று அமைச்சர் கேட்டார். இதோ இவை தான் என்றபடி நசுங்கிப் போன தவளையையும் ஓணானையும் காட்டினார், பரமார்த்தர்! எல்லோருக்கும் வியப்பாக இருந்தது. இது தவளை அல்லவா? இந்தத் தவளையா உன் சீடன்? எனக் கேட்டான் மன்னன்.

இது ஓணான்! இதுவா உன் சீடன்? யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? என்று கோபமாகக் கேட்டார் ஓர் அமைச்சர்.

அரசே! நான் எதற்கு உன்னை ஏமாற்ற வேண்டும்? உண்மையாகவே இந்தத் தவளையும் ஓணானும் என் சீடர்கள்தாம். நம்மைப் போல மனிதர்களாகத்தான் இவர்கள் இருந்தார்கள். ஒரு மந்திரவாதியின் சாபத்தால் இப்படி ஆகிவிட்டார்கள்! என்று பொய் கூறினார் பரமார்த்தர்.

தவளைதான் என்றாலும் மனிதர்களைப் போலவே பேசுவான்! ஓணான்தான் என்றாலும் தினம் நூறு பொற்காசு சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுப்பான்! என்று புளுகினான் மண்டு.

இதைக் கேட்டு, அரசனுக்கும் மந்திரிகளுக்கும் பெரும் சங்கடமாக இருந்தது. சரி நடந்தது நடந்து விட்டது. இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார், அமைச்சர். என்ன செய்வதா? இவர்களை வைத்துத்தானே எங்கள் பிழைப்பே நடந்தது. அதனால், மறுபடியும் இதே தவளைக்கும் ஓணானுக்கும் உயிர் கொடுங்கள். இல்லாவிட்டால், தினம் நூறு பொற்காசுகளை நீங்கள் தான் தர வேண்டும், என்றார் பரமார்த்தர்.

வேறு வழி தெரியாத மன்னன், மறுபடியும் உயிர் கொடுக்க முடியாது. அதனால் தினம் நூறு பொற்காசு தந்து விடுகிறேன், என்று ஒப்புக் கொண்டான். மடத்துக்கு வந்ததும், செத்துப் போன தவளையையும் ஓணானையும் காட்டி ராஜாவையே ஏமாற்றி விட்டோம்! இனிமேல் தினமும் நூறு பொற்காசு கிடைக்கப் போகிறது என்று குதித்தார்கள்.

முட்டாளையும் மூடனையும் பார்த்து நீங்கள் இரண்டு பேரும் செத்து விட்டதாகக் கூறி விட்டோம். ஆகையால் இனிமேல் மடத்தை விட்டு வெளியே போகவே கூடாது. தப்பித் தவறி வெளியே போனீர்களானால் மாட்டிக் கொள்வோம். ஜாக்கிரதை! என்று எச்சரிக்கை செய்தார் குரு.

ஒரே வாரம் கழிந்தது. இரவு நேரத்தில் எல்லோரும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டு இருந்தனர். முட்டாளும் மூடனும் மட்டும் விழித்துக் கொண்டனர். சே! ஊர் சுற்றி ஒரு வாரம் ஆகிறது! யாருக்கும் தெரியாமல் ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு வந்து விடலாம்! என்று ஆசைப்பட்டனர்.

கையில் கொள்ளிக் கட்டையுடன் இருவரும் வெளியே புறப்பட்டனர். இரண்டு தெரு சுற்றுவதற்குள், இரவுக் காவலர்கள் கண்ணில் பட்டு விட்டனர்!

உடனே இருவரையும் துரத்திப் பிடித்தனர். பொழுது விடிந்ததும், மற்ற சீடர்களும் குருவும் கைது செய்யப்பட்டனர்.

ஆளை உயிரோடு வைத்துக் கொண்டே செத்து விட்டதாக ஏமாற்றினீர்கள். அதனால், இப்போது உண்மையாகவே இவர்கள் இருவரையும் தேர் ஏற்றிச் சாகடிக்கப் போகிறேன்! என்றான், மன்னன்.

அதைக் கேட்ட குருவும் சீடர்களும் அலறினார்கள். ஐயோ, மன்னா! தெரியாமல் செய்து விட்டோம். உங்களிடம் இருந்து வாங்கிய பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறோம். மன்னித்து விட்டு விடுங்கள், என்று அரசனின் கால்களில் விழுந்தார். சீடர்களும் கீழே விழுந்து வேண்டினார்கள்.

மன்னனும் போனால் போகிறது என்று மன்னித்து அனைவரையும் விடுதலை செய்தான்!

## 08.2017 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 322 - மகா அலெக்சாண்டர் இறந்ததைத் தொடர்ந்து ஏதென்சுக்கும் மக்கெடோனியர்களுக்கும் இடையில் "கிரானன்" என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.
- 1461 - மிங் வம்ச சீன தளபதி காவோ சின் செங்டொங் பேரரசருக்கு எதிராக இராணுவப் புரட்சியை நடத்தி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டான்.
- 1819 - கொலம்பியாவின் "பொயாக்கா" என்ற இடத்தில் ஸ்பானியர்களுக்கு எதிரான போரில் சிமோன் பொலிவார் பெரு வெற்றி பெற்றான்.
- 1832 - இலங்கையில் சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- 1898 - யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் ஸ்கொட் தலைமையில் மானிப்பாய் வைத்தியசாலையில் புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1906 - கல்கத்தாவில் வங்காளப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டத்தின் போது முதல் இந்திய தேசியக் கொடி உருவாக்கப்பட்டு பார்சி பகான் சதுக்கத்தில் ஏற்றப்பட்டது.
- 1927 - ஒண்டாரியோவுக்கும் நியூயோர்க்கிற்கும் இடையில் அமைதிப் பாலம் அமைக்கப்பட்டது.
- 1933 - ஈராக்கில் சுமைல் கிராமத்தில் 3,000 அசிரியர்கள் ஈராக்கிய அரசால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: குவாடல்கனால் போர் ஆரம்பம். அமெரிக்க கடற்படையினர் சொலமன் தீவுகளின் குவாடல்கனால் தீவில் தரையிறங்கினர்.
- 1944 - திட்டப்படுத்தப்பட்ட முதலாவது கணிப்பானை (ஹார்வார்ட் மார்க் I) ஐபிஎம் நிறுவனம் வெளியிட்டது.
- 2006 - இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் உறுப்பினர் சிவப்பிரகாசம் மரியதாஸ் என்பவர் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டார்.

பிறப்புகள்

- 1912 - பி. எல். பட்நகர், இந்தியக் கணிதவியலாளர் (இ. 1976)
- 1925 - மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன், இந்திய உயிரியலாளர்
- 1950 - சி. தண்டாயுதபாணி, இலங்கை அரசியல்வாதி
- 1950 - ஒசி அபேகுணசேகரா, இலங்கை அரசியல்வாதி (இ. 1994)

இறப்புகள்

- 1941 - இரவீந்திரநாத் தாகூர், நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் (பி. 1861)
- 1974 - வாணிதாசன், புதுவைத் தமிழறிஞர், கவிஞர் (பி. 1915)
- 1996 - கிருஷாந்தி குமாரசுவாமி, இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டவர் (பி. 1977)
- 2013 - ச. சபாநாயகம், ஈழத்து மரபுவழி ஓவியர்
- 2014 - சுருளி மனோகர், தென்னிந்திய நகைச்சுவை நடிகர்

சிறப்பு நாள்

- இளைஞர் தினம் (கிரிபட்டி)
- குடியரசு நாள் (கோட் டிவார்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 70 | 80 | 120 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 300 | 350 | 400 | 350 | 150 |
| தக்காளி | 150 | 200 | 120 | 160 | 160 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 120 | 70 |
| கோவா | 140 | 150 | 70 | 150 | 120 | 150 | 120 |
| கரட் | 160 | 250 | 200 | 240 | 200 | 240 | 250 |
| பூசணி | 60 | 100 | 50 | 60 | 80 | 100 | 90 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 150 | 150 | 140 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 120 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 170 | 200 | 160 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 100 | 120 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 50 | 130 | 160 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 | 150 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 | 120 | 150 | 100 |
| பீற்றூட் | 50 | 50 | 35 | 60 | 80 | 50 | 100 |
| கறிமிளகாய் | 150 | 200 | 150 | 200 | 160 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 70 | 120 | 80 | 120 | 100 |
| போஞ்சி | 150 | 200 | 100 | 80 | 200 | 180 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 50 | 80 | 100 | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 60 | 20 | 50 | 80 | 120 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 75 | 60-80 | 70 | 60 |
| இராசவள்ளி | 250 | 200 | – | 300 | 300 | 300 | – |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 240 | 160 | 150 | 150 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 40 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 100 | 80 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றி என்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.

- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியாகும் என்ற ஏக்கம்

காலம்தான் மிகச்சிறந்த மாற்றங்களையும் மிக மோசமான வீழ்ச்சிகளையும் தருவது. எனினும் காலத்தின் அசைவு தரக்கூடிய முடிவுகளை நாம் எவரும் கண்டு கொள்வதில்லை.

எல்லாம் நம்மாலும் நாம் போடும் திட்டங்களாலும் நடப்பதாக நினைத்துக் கொள்கிறோம். இதனை ஊக்குவிப்பதாக விமர்சனக் கருத்துக்களும் அமைந்து விடுகின்றன.

இதைக் கூறுவதற்காக திட்டமிடல்களையும் விமர்சனங்களையும் நாம் அடியோடு நிராகரிப்பதாக யாரும் நினைத்துவிடக் கூடாது.

மாறாக திட்டமிடல்களும் விமர்சனங்களும் நமக்குத் தேவையானவை. அதேநேரம் காலத்தின் அசைவு என்பது நமது திட்டங்களை - விமர்சனங்களைத் தவிடுபொடியாக்கக் கூடியது என்பதுதான் நம் கருத்து.

எனினும் கால அசைவு பற்றியோ அதனது மாற்றங்கள் பற்றியோ எவரும் கருத்திற் கொள்வதில்லை.

எமது விடுதலைப் போராட்டத்தின் முடிவு தோல்வியாக அமைந்ததில் கூட, காலத்தின் அசைவுக்கு நிறைந்த வகிபங்கு உண்டு.

அதாவது போராட்ட காலத்தை நீட்டித்துக் கொண்டதன் காரணமாக எங்களின் திட்டங்கள் காலாவதியாயிற்று.

உலகமயமாதலும் சர்வதேசத்தின் கொள்கை மாற்றங்களும் ஆட்சி மாற்றங்களும் எங்களின் செயல்களால் ஏற்பட்ட எதிர்ப்புகளும் சேர்ந்து; வெற்றி நிச்சயம் என்றிருந்த எங்கள் விடுதலைப் போராட்டத்தை எங்கோ கொண்டு போய்விட்டது.

இது நடந்ததால், நம்பியிருந்த எத்தனையோ பேர் தங்களை தங்கள் கொள்கைகளை மாற்ற வேண்டியதாயிற்று.

தியாகங்கள் துரோகங்களாகக் கணக்கிடப்பட்டன. விடுதலையை நேசித்தவர்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகினர்.

போராட்டத்தில் எந்தப் பங்கும் செய்யாதவர்கள் தங்களை விடுதலைப் போராட்டத்தின் சிற்பிகளாக கற்பனை செய்து கொண்டனர்.

இதனால் தமிழ் மீதும் தமிழன் மீதும் எந்தப் பற்றும் விசுவாசமுமில்லாதவர்கள் ஆசாடபூதிகளாக மக்கள் முன்தோன்றினர்.

பதவியைப்பெற்று அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு அங்கும் இங்குமாக தகிடு தத்தம் போட்டனர்; போடுகின்றனர். இவையெல்லாம் விடுதலைப் போராட்டத்தின் தோல்வியால் வந்தவைதான்.

விடுதலைப் போராட்டம் முற்றுப் பெறாமல் இருந்திருந்தால் அல்லது வெற்றிவாகை சூடியிருந்தால் நிலைமை என்னவாக இருந்திருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டிய தேவை இராது.

என்ன செய்வது காலத்தின் அசைவு பற்றி இம்மியும் சிந்திக்காததால் நடந்தது இது.

சரி, இனி மேலாவது எங்களை சுதாகரித்துக் கொண்டு எங்களின் இலட்சியத்தை நோக்கி நகரலாம் என்றால்,

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்று தெரியாததால், நேர்மை, நீதி, விசுவாசம் கொண்டவர்கள் தாமாக ஒதுங்கியுள்ளனர். இப்போது தமிழ் மக்களின் நிலைமை மிகவும் மோசமானதாகவுள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து தமிழ் மக்கள் மீண்டெழுவதென்பது கடினமான காரியம். அந்தக் கடினம் திரும்பவும் இறுகுவதாகவே உணர முடிகிறது. இந்த உணர்வு கூட்டமைப்பும் வடக்கின் முதலமைச்சரும் சந்தித்த போது தெரிகிறது.

ஆம், ஊழலை மறைக்க, ஊழல் செய்தவர்களை காப்பாற்ற ஒரு அரசியல் தலைமை முற்படுகிறது எனில் தமிழ் மக்களின் எதிர்காலம் ஏக்கம் நிறைந்ததாகவே இருக்கும்.

# நுவரெலியாவில் சீன பெண்ணின் மனிதாபிமானம்

நுவரெலியாவில் அநாதரவாக திரியும் நாய்களுக்காக சீனப் பெண்ணொருவர் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நுவரெலியா நகரத்தில் சுற்றித் திரியும் நாய்களுக்கு உணவு வழங்கியதோடு, அவை பாதுகாப்பாக உறங்கும் வகையில் சாக்குகளையும் கொள்வனவு செய்து கொடுத்துள்ளார்.

குறித்த வெளிநாட்டு பெண்ணினால் பல்வேறு வகையான உணவு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் அந்த நகரில் சுற்றித் திரியும் நாய்களை ஒரு இடத்திற்கு அழைத்து வந்து அவற்றினை மிகவும் அன்போடு வழங்கியுள்ளார்.

நாய்களின் மூக்கு பகுதியில் உணவினை வைக்கும் அவர், நாய்கள் விரும்புவதனை மாத்திரம் தெரிவு செய்து அதனை வழங்கியுள்ளார்.

இதன்போது நாயின் தலையினை அன்பாக தடவிக் கொடுத்து உணவு வழங்குகிறார்.

தனது பெயர் மற்றும் ஊர் போன்றவை அவசியமற்ற விடயங்கள் எனவும், சுற்றி திரியும் நாய்களையும் செல்லப்பிராணிகளை போன்று பாதுகாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மனிதர்களுக்கு போன்று அவற்றிற்கும் அன்பு காட்ட வேண்டும் என குறித்த சீனப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சீனப் பெண்ணின் மனிதாபிமான செயற்பாடு, இலங்கையர்களுக்கு ஒரு மிகப்பெரிய எடுத்துக்காட்டாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

## இசைத்தட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

றோயல் கிரியேசன் - சிவானந்தன் றஜித் தயாரிப்பில் நல்லூர் முருகனுக்கு நல்லூர் கார்த்திகைக் குமரா போற்றி எனும் இசைத் தட்டு வெளியீடு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இன்று மாலை 4.30 மணியளவில் இடம் பெறவுள்ளது. (மு)

## துப்பாக்கியுடன் சிக்கியவர் விளக்கமறியலில் வைப்பு

(கொழும்பு)

திவுலபிடிய பகுதியில் துப்பாக்கியுடன் நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மினுவான்கொட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, சந்தேகநபரை நாளை 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இவர் திவுலப்பிடிய பகுதியைச் சேர்ந்த 73 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## குருநாகலையில் விபத்து; இரண்டு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

குருநாகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருநாகலை-தம்புள்ளை வீதி, படகமுவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கார் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் குருநாகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அம்மா நான் பெயரே இல்லாதவனாக இருந்தேன். என்னைப் பார்த்தவர் எல்லாம் அவரவர் விருப்பப்படி ஆயிரம் பெயர் சூட்டி கருப்பன் என்றும் கார்வண்ணன் என்றும் பச்சைவண்ணன் என்றும் பலவாறு அழைத்தார்கள். மாடுகளை மேய்த்ததைப் பார்த்துவிட்டு கோபாலன் என்றும் கூப்பிட்டார்கள். இன்றுதான் ஸ்ரீநிவாசன் என்னும் சிங்காரப் பெயர் பெற்றேன். அன்னையான உன்னைவிட ஆயிரம் மடங்கு அதிர்ஷ்டசாலி நானே. இனி எந்நாளும் அம்மாவென்றே உன்னை அழைப்பேன். இனி ஒருபோதும் உனை விட்டுப் பிரியேன் என்று தேன் தோய்ந்த சொற்களால் தித்திக்கத் தித்திக்கப் பேசினான்.

வகுளாதேவி வானுலகு வரப்பெற்ற ஆனந்தம் அடைந்தான். ஸ்ரீநிவாசனின் சிரத்தில் பொருக்குத் தட்டிப் போயிருந்த புண்ணைச் சீர்ப்படுத்தினாள். கானகத்தில் கிடைத்த கனி வகைகளால் அவன் பசி ஆற்றினாள். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கணப்பொருத்தங்களை எப்படி நிர்ணயம் செய்ய வேண்டும்?**

| பெண் | ஆண் | நிலை |
|---|---|---|
| தேவகணம் | தேவகணம் | உத்தமம் |
| தேவகணம் | மனுஷ கணம் | உத்தமம் |
| மனுஷகணம் | தேவகணம் | உத்தமம் |
| ராஜஸகணம் | தேவகணம் | உத்தமம் |
| ராஜஸ கணம் | ராஜஸ கணம் | மத்திமம் |
| ராஜஸ கணம் | மனுஷ கணம் | அதமம் |

(தொடரும்)

## பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளில் பார்வையை நீங்களும் அவதானியுங்கள்

மிக அண்மையாக இருந்து தொலைக்காட்சி பார்த்தல்

கண்ணுக்கு மிக அண்மையாக வைத்து புத்தகங்களை வாசித்தல்

தலைவலியினால் அவதியுறுதல்

எந்நேரமும் கண்ணை கசக்குதல்

தலையைத் திருப்பிப் பொருட்களைப் பார்த்தல்

இவ்வாறான அறிகுறிகள் இருப்பின் கண்பார்வை பரிசோதனை செய்யப்படல் வேண்டும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவனின் கருவி



இறைவனுடைய எந்திரமாகவே இருக்கக்கூடிய மனிதனிடம்-இறைவனுடைய கருவியாகவே இருக்கக் கூடிய மனிதனிடம் - முழுமையாக ஆறாவது அறிவு வந்து விட்டதால், இறைவனோடேயே கலக்கக் கூடிய அளவுக்கு மனிதனிடம் ஆற்றல் இருப்பது தெரியவரும். அந்த ஆற்றலைக் கொஞ்சம் வளர்த்துக் கொண்டால் போதும். நீங்கள் இனிமேல் இறைவனிடம் போய் எதுவும் தனியாகக் கேட்க வேண்டியது இல்லை. உங்களுடைய மனத்தின் அடித்தளத்தில் இறைவனே அமர்ந்திருக்கின்றான். அதைத் தெரிந்து கொள்ளாதது தான் உங்களுடைய தவறு. அந்தத் தவறு தான் அவனை மறைத்துக் கொண்டு இருக்கிறது.

சும்மா ஒரு தட்டு தட்டிவிட்டால் போதும் உங்கள் அறிவு பிரகாசிக்க ஆரம்பித்து விடும். அப்படித் தட்டிவிடும் வேலை தான், "நான் என்ன செய்ய வேண்டும்? என்னிடம் என்ன இருக்கிறது? அதை எந்த அளவு வேண்டுமோ அந்த அளவு எப்படிப் பெருக்கிக் கொள்ள முடியும்?" என்ற ஊக்கம்.

ஒரு குடும்பமானாலும் சரி, தனி மனிதன் ஆனாலும் சரி அல்லது சமுதாயம் ஆனாலும் சரி, எல்லோருமே ஆக்கத்துறையில் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க முடியும். இந்தத் தத்துவம் விஞ்ஞானத்திற்கு ஒத்தது. இந்த எனது விளக்கம் உளவியல் தத்துவத்திற்கும் சரி அல்லது வாழ்க்கைக்கும் சரி, எதற்கும் முரண்படாது. உலகத்திலே இதுவரைக்கும் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய எந்த மதத்திற்கும் அது முரண்பாடானது ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி; பண்டத்தரிப்பு உயர்தர பாடசாலை சம்பியன்





இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 12 வயதுப் பிரிவினருக்கான தொடரில் பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனானது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பெறாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. (க)

# சிநேகபூர்வ கிரிக்கெட் இளையோர் வெற்றி

விவேகானந்த விளையாட்டு கழகத்தின் மூத்த வீரர்களுக்கும் இளைய வீரர்களுக்குமிடையேயான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி மாதனை மைதானத்தில் 05.08.2017 அன்று நடைபெற்றது.

10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய மூத்தோர் அணி 5 விக்கட் இழப்புக்கு 74 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இளையோர் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை தழுவிக் கொண்டது. (கு)

# மெலிஞ்சிமுனை வெற்றி



புங்குடுதீவு நசறத் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட போட்டியில் (05.08.2017) அன்று நடைபெற்ற போட்டியில் இருதயராஜா மெலிஞ்சிமுனையை 2:0 என்ற கோல்கணக்கில் அம்பிகைநகர் உதயசூரியன் அணியை வெற்றியீட்டியுள்ளது. (க)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்; பரு. பிரதேச செயலகம் சம்பியன்





அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான பெண்களுக்கான கரம் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான கரம் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இவ்விறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் மோதின.

மூன்று தனிநபர் ஆட்டத்தையும் இரண்டு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்ட இப்போட்டியில் முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இரு அணியினரும் தனி ஒரு வெற்றியைப் பதிவு செய்தனர்.

அடுத்து இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்திலும் இரு அணியும் தலா இரண்டு வெற்றிகளை பதிவு செய்ய வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட இறுதிச்சுற்றில் பருத்தித்துறை அணி வெற்றி பெற்று 3:2 எனத்தொடரைக் கைப்பற்றியது பருத்தித்துறை பிரதேச செயலக அணி. (க)

# சுற்றுத்தொடரில் வெற்றியை தமதாக்கி கொண்டது TAMILAN 24 " Thunders" அணி

அரியாலை பிறிமியர் லீக் - 2017 கிரிக்கெட் விழா 05.08.2017 அன்று காலை ஆரம்பமானது. 8 அணிகளை கொண்ட இம் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் முதல் நாள் முதல் போட்டியில் Tamilan24 " Thunders " அணி வெற்றியை தமதாக்கி கொண்டது. (க)









பரலோக அன்னையின் 75வது பவளவிழாவைமுன்னிட்டு சென்மேரிஸ் சனசமூக நிலையமும் ஆலய சபையும் இணைந்து நடத்தும் விளையாட்டு நிகழ்வுகளில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் மின்னொளியில் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளன.







கொலின்ஸ் விளையாட்டு கழகம் நடத்திய வடமராட்சி பிறிமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் மருதம் பெயின்ட் டீலரை உரிமையாக கொண்ட Vada strikers அணியினை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தினை சுவீகரித்தது செல்லமுத்தூஸ் ஐ உரிமையாக கொண்ட Pearl boys அணியினர். இப் போட்டியின் ஆட்டநாயகனாக Pearl boys அணியின் சஞ்சீ தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அல்வாய் வடக்கில்...

மேற்கொள்ளப்பட்டதுடன் வீடுவீடாக சோதனையும் நடத்தப்பட்டது.

பல்வேறு குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெற்ற மேற்படி பகுதியில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து 3 1/2 மணித்தியாலம் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்தினர்.

இதில் பல்வேறு குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்களும் பிடிபிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களும் சந்தேகத்தின் பேரிலும் மொத்தமாக 18 பேர் கைது செய்யப்பட்டதுடன் ஒரு மோட்டார் சைக்கிளும் கார் ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (மு-60)

## நான் நல்லாட்சி...

வேண்டும். நான் இந்த நல்லாட்சிக்கு வந்தது கள்வர்களை பிடிப்பதற்குத்தான். ஆனால் அவர்களை எமக்குப் பாதுகாக்க வேண்டிய தேவையில்லை. அவ்வாறு அவர்களை பாதுகாக்குமாறு கேட்டால் சகல பதவிகளையும் விட்டுவிட்டு வீட்டுக்கு போவோம் என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (மு)

## அரசியல் தீர்வு...

இந்த சந்திப்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பிரித்தானிய பிரதிநிதிகளிடம் தெரிவித்தமை வருமாறு.

இந்த வெஸ் மினிஸ்டர் அமைப்பில் இருந்து வருகை தந்திருக்கின்ற உறுப்பினர்களே! நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானம் தொடர்பான எமது முயற்சிகள் அனுபவங்களை இந்த சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்துகிறேன்.

நல்லிணக்கம் என்பது சிந்தனை சார்ந்த ஒன்றாகும். மீள்கட்டுமானம் என்பது செயற்பாடு சார்ந்த ஒன்றாகும். ஆகவே இது சார்ந்த செயற்பாடாகவே நல்லிணக்கம் காணப்படுகிறது.

இங்கு வந்திருக்கின்ற பிரித்தானிய நண்பர்கள் கூட இதனை சிந்தனை அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறவர்கள் என நான் நம்புகிறேன். பெரும்பான்மை அல்லது சிறுபான்மை அவர்களும் தமது சிந்தனை அடிப்படையிலேயே மேற்கொள்கிறார்கள்.

இதனை நாம் மேலும் தெளிவாக நோக்குவோமேயானால் வட-கிழக்கில் வாழ்கிற தமிழர்கள் தாம் 2000 வருடத்திற்கு மேலாக ஒரு பாரம்பரிய கலாசாரம் மொழி மத அனுட்டானங்களைக் கொண்ட ஒரு தனியான சிந்தனையைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் கடந்த 100 வருடத்தில் தமிழ் பேசும் மக்களிடையே ஊடுருவியுள்ள ஒரு சிந்தனைக்கோட்பாடாக இது இருக்கிறது. ஆனால் பெரும்பான்மை பௌத்தர்கள் அல்லது சிங்கள மக்கள் தமிழ் மக்களை இந்தியாவிலிருந்து வந்ததாக கருதுகின்ற ஒரு நிலைப்பாட்டில் இருக்கிற ஒரு சூழலும் இருக்கிறது. ஆனால் யதார்த்தமாக இலங்கையில் வட கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில் பௌத்தத்துக்கு முன்பே இந்துக்களாகவும் தமிழர்களாகவும் தாங்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இந்நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு மனோபாவமாக தெரிவதையும் இந்த சந்தர்ப்பத்திலே கூறவேண்டும். அதேபோன்று பௌத்தர்கள் இல்லாத வட-கிழக்கில் எவ்வித சலனமுமின்றி அந்த வழிபாட்டுத் தலங்கள் இல்லாமல் போயிருக்கலாம். அதேபோன்று இங்கு பௌத்தர்களாக இருந்தவர்கள் தமிழர்கள் அன்றி சிங்களவர்கள் அல்ல என்பதையும் குறிப்பிட வேண்டும்.

அதேபோன்று தமிழ் மக்களுடைய தாய்மொழியான தமிழும் தனித்தன்மையானது. ஆகவேதான் இனத்துக்கான தனித்தன்மையை கொண்ட தமிழர்கள் தங்களுடைய இன மத மொழி கலாசாரங்களை பாதுகாக்க முற்படுகிறார்கள். அதற்காகவே அவர்கள் தங்களுடைய சுயத்தையும் தாம் பேணிப் பாதுகாத்து வந்த உரிமையையும் பாதுகாத்துக் கொள்ள சமஷ்டி என்னும் முறையை கோரியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுடைய யதார்த்த நிலையை சிங்கள மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். அதேபோன்று சிங்கள மக்களுடைய மனோபாவத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான சமஷ்டி என்னும் பதம் ஒவ்வாததாகவே காணப்படுகிறது.

ஆனால் சமஷ்டி என்பது பிரிவினை வாதமோ அல்லது பிரிவினை வாதத்திற்கான வழி வகைகளை ஏற்படுத்தும் பதமோ அல்ல. சமஷ்டி என்பது வேற்றுமையில் ஒற்றுமை காணும் முறையாகும். ஆகவே இதனை இரண்டு தரப்பினரும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு சூழல் உருவாக வேண்டும். அதேபோன்று தமிழ் மக்களுடைய உண்மையான வரலாற்றை வெளிப்படுத்துகின்ற இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் மீதான சிங்கள மக்களின் புரிதல் சரியாக அமைய வேண்டும். இறுதியாக இந்த நல்ல செயற்பாடு களை சிந்தனை பூர்வமாக அதனை செயல் வடிவுடன் கொண்டுவர எல்லோரும் முற்பட வேண்டும். (மு)

## எமது விடுதலை...

கிடையில் நடத்தப்பட்ட கணிதப் போட்டிப் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா நேற்றைய தினம் வல்வை முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இளைய தலைமுறையினரின் இன்றைய போக்கு மனவருத்தத்திற்குரியது. இதற்கு வலுவான காரணமாக அமைவது வெளிநாடு களில் இருந்து கிடைக்கப் பெறுகின்ற பண உதவிகள் முறையற்ற விதத்தில் செலவு செய்யப்படுவதே என்பது எமது தீர்க்கமான முடிவாக அமைந்துள்ளது.

தமது உறவுகளின் வாழ்வு நிலைமட்டங்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்ற நல்ல சிந்தனையில் தமது உடலை வருத்தி வெளிநாடுகளில் உழைத்த பணத்தின் ஒரு பகுதியினை தமது உறவுகளுக்கு எம்மவர்கள் அனுப்பி வைக்கின்றார்கள். அவ்வாறு கிடைக்கப் பெறுகின்ற பணம் எங்கள் இளைஞர் யுவதிகளுக்கு உழைத்துப் பெறாத பணம். அதனால் அவர்களுக்கு உழைப்பின் வலி தெரிவதில்லை. இங்குள்ள பெரியோர்கள் முதல் இளைஞர், யுவதிகள், குழந்தைகள் வரை இலவசமாகக் கிடைக்கும் பணத்தை வீணே விரயம் செய்கிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளாக தொடர் யுத்தத்தின் காரணமாக பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வு நிலைகள் கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு எம்மாலான உதவிகளைப் புரிவது அவசியம். அதை நாம் செய்தும் வருகின்றோம். ஆனால் அதே நேரம் எதுவித எதிர்கால சிந்தனையும் இன்றி தறிகெட்டுத் திரிகின்ற ஒரு கூட்டத்தை நல்வழிப்படுத்தி சமுதாய நீரோட்டத்தில் மீள இணைத்துக் கொள்ள வேண்டியதும் எமது கடமையாகும்.

நான் அண்மைக்காலங்களில் ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள் குற்றம் இழைப்பது சம்பந்தமாகப் பேசப்போய் எமது விடுதலை வீரர்களை நான் குறிப்பிட்டதாக சிரேஷ்ட அரசியல்வாதிகள் கூட தமது கருத்துக்களை பிழையாக வெளியிட்டமை கவலைக்குரியது. நான் புலிகள் இயக்கப்போராளிகள் பற்றிக் குறிப்பிடவில்லை. விடுதலைப்புலிகள் என்ற சொல்லே என்னால் பாவிக்கப்படவில்லை. போர்ப்பயிற்சி பெற்று அரச படைகளுடன் சேர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபட்டோரே என் கண்டனத்திற்கு ஆளாக்கப்பட்டவர்கள். காரணமில்லாமல் முன்னைய போராளிகளைப் பொலிஸார் கைதுசெய்வதையும் நாம் கண்டிக்கின்றோம். பயிற்சிகள் பெற்றுவிட்டு பாரதூரமான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களையும் நாம் கண்டிக்கின்றோம். மேற்படி வன்முறைகளினால் அப்பாவி வயோதிபர்களும் குடும்பங்களும் உடல் உளவியல் ரீதியாக பாதிப்படைந்து நடைப்பிணங்களாக மாறியிருப்பதை எத்தனை இளைஞர்கள் உணர்ந்திருக்கின்றார்கள்? அவர்களின் சிந்தனைகளில் மாற்றம் வரவேண்டும். இளைஞர்கள் சற்று ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினால் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகிட்டும். இன்றைய குற்றச் செயல்களுக்கு பல பெற்றோர்களும் காரணமாகிவிடுகின்றார்கள். தமது பிள்ளைகள் எங்கு செல்கிறார்கள், எவருடன் பழகுகிறார்கள் என்பதை அவர்கள் கண்டறிவதில்லை. நடுச்சாமத்தில், விடியற்காலையில் தமது பிள்ளைகள் கொண்டுவருகின்ற பணம், நகை நட்டு ஆகியவற்றை எங்கிருந்து எடுத்துவந்தார்கள் என்பதை அறியமுற்படுவதில்லை. இத் தேட்டங்கள் முறையாக தேடப்பட்டனவா அல்லது முறை தவறிய தேட்டமா? இவ்வாறான கேள்விகள் எத்தனை பெற்றோர்களின் மனதில் உதித்திருக்கின்றன?

இவற்றுக்கெல்லாம் விடை காணப்பட வேண்டுமாயின் சமுதாயம் விழிப்புணர்வு பெறவேண்டும். சமூக ஒற்றுமை மேலோங்க வேண்டும். எம்மைப்போல் பிறரையும் நேசிக்கும் தன்மை வளரவேண்டும். போதுமென்ற மனத்துடன் வருவாய்க்கேற்ப வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வன்முறைகளுக்கும் முறையற்ற பொருள் தேடல்களுக்கும் முடிவு காலம் வரும். அதற்காக நாம் அனைவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (மு-9.60)

## மாவையின் பவளவிழா




உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வு நேற்றைய தினம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. அதில் சிறப்பு நிகழ்வாக பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசாவின் 75ஆவது ஆண்டு பவளவிழா நிகழ்வு கொண்டாடப்பட்டது.

முனைவர் மு.சேதுராமன் தலைமையில் நடைபெற்ற இந்த இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கௌரவ விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் நடராஜன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (மு-9)

## திருடர்கள்...

டிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் திருடர்களை பாதுகாக்காது எனவும் ஐக்கிய தேசியக் கட்சி திருடர்களின் கட்சி அல்ல எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் தொடர்பான சம்பவங்கள் குறித்து தகவல்கள் வெளியானால், அதற்கு அமைய விசாரணைகள் நடத்தப்படும்.

எவரிடமும் விசாரணை நடத்தும் வாய்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் டி.கே.டபிள்யூ கலாச்சார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில் நீதிபதிகள் அடங்கிய சுயாதீன குழு ஒன்றை ஸ்தாபித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

அதேபோல் உமா ஓயா திட்டம் தொடர்பில் விசாரணை குழு ஒன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். இதற்கு கூட்டு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பொலிஸ், நீதிமன்றம், அரசதுறை, ஊடகம் மற்றும் அமைச்சர்கள் சுயாதீனமாக இயங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் 46 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், இலங்கை விமான சேவையில் கடந்த ஆட்சியில் இறக்குமதி செய்யப்பட்ட மிக் 360 விமானம் 8 கொள்வனவு செய்யப்பட்டதில் 135 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதைப்பற்றி ஊடகங்கள் வெளிக்கொண்டு வருவதில்லை. தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஏற்பட்ட நட்டத்தை நிறுத்தியுள்ளோம்.

இனி அந்த முதலீடு ஊடாக இந்த பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு)

## 20வது திருத்தச்...

பாளர்கள் மற்றும் ஊழலுக்கு எதிரான அமைப்புகளின் ஒன்றியம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது கபே அமைப்பின் பிரதான ஒருங்கிணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதி ஒருவரின் பதவித் தவணைகளை வரையறை செய்வதை ரத்துச் செய்த 18-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் இருந்த ஜனநாயகத்துக்கு ஆபத்தான பண்புகள் காரணமாக அதனை இந்த அரசாங்கம் முற்றாக நீக்கியுள்ளது.

எனினும் அதனை விட பயங்கரமான ஆபத்துக்களைக் கொண்டுள்ள 20-வது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள இந்த அரசாங்கம் பெரும் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டால் எதிர்வரும் 2019ம் ஆண்டு ஒக்டோபர் வரை மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் கிடைக்கும்.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் சாக்கில் அரசாங்கம் அதனை நியாயப்படுத்த முயற்சிக்கும்.

அந்த வகையில் அரசாங்கத்தின் 20வது திருத்தச் சட்டமானது ரத்துச் செய்யப்பட்ட 18-வது திருத்தச் சட்டத்தை விடவும் ஜனநாயகத்துக்கும் நாட்டுக்கும் பெரும் ஆபத்தானது என்றும் கீர்த்தி தென்னக்கோன் தொடர்ந்தும் எச்சரித்துள்ளார். (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி உத்தி...

றக் கூடியதாக உள்ள பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவாகும் பட்டதாரிகளுக்கு ஒரு வருட பயிற்சி வழங்கப்படுவதுடன், பயிற்சி நடைபெறும் கால கட்டங்களில் மாதமொன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் மட்டும் கொடுப்பனவாக வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (மு-11)

## பதவி நீக்கப்பட்டார்...

வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2 போனஸ் ஆசனங்களில் ஒன்றுக்கு நியமிக்கப்பட்டு கடந்த 4 வருடங்களாக மாகாணசபை உறுப்பினராக இருந்த அயூப் அஸ்மின் கட்சியிலிருந்தும், கட்சியின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் முழுமையாக நீக்கப்படுவதோடு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வட மாகாண சபை பிரதிநிதியாகவோ அல்லது ஏனைய விடயங்கள் எதனையும் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவோ கருதப்படமாட்டார்.

இதனை நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது என குறித்த முன்னணியில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் ஏனைய நலன்கள் குறித்த விடயங்களில் வட மாகாண சபையின் நடவடிக்கைகள், எமது பிரதிநிதியான அயூப் அஸ்மினின் செயற்பாடுகள் விரிவாக ஆராயப்பட்டன.

இதனுடன் தொடர்புபட்ட ஆறு விடயங்களில் திருப்தியடையக் கூடிய முன்னேற்றங்கள் எதுவும் காணப்படாததால், குறித்த பதவியில் எமது பிரதிநிதி தொடர்ந்தும் இருப்பதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வந்தது.

இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது குறித்துப் பேசி, எமது மீளழைத்தல் தீர்மானத்தை சுமுகமாக நிறைவேற்றுவதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், அவ்விடயத்தை செய்து முடிப்பதற்கு நாம் எதிர்பார்த்தை விடவும் கூடுதலான காலம் எடுத்துவிட்டது. இந்தத் தாமதத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முக்கிய காரணம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது என அம் முன்னணியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## ஆட்டம் கண்டது பங்...

நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது இந்த ஆண்டின் இரண்டாவது மிகப் பெரிய வீழ்ச்சி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பங்குச்சந்தை சுட்டெண்களான ASPI 1.91 சதவீதத்தாலும் S&P SL 20 ஆனது 1.40 சதவீதத்தாலும் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் பிணை முறி தொடர்பில் முன்னாள் நிதியமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகள் தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த விசாரணை காரணமாக அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது போகும் என்ற காரணத்தினால் உள்ளூர் முதலீட்டாளர்களின் முதலீடு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிரேஷ்ட பொருளியலாளர் லலித்சிறி குணருவான் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் நிதி நிலைமையை காட்டும் குறியீடான பங்குச்சந்தையின் வீழ்ச்சி எழுச்சி காணப்படாத போதிலும் இந்நிலைமை, இலங்கையின் நிதிமுகாமைத்துவமானது படுமோசமடைந்துள்ளமையினை சுட்டிக்காட்டுகின்றது.

அத்துடன், அரசாங்கம் வெளிநாட்டு நாணயங்களை ஒழுங்காக முகாமை செய்வதிலும் தவறு விடுகின்றது.

வெளிநாட்டு நாணய நிதியத்தின் தாக்கத்தால் இலங்கையின் கொள்கை வட்டிவீதத்தில் தளம்பல் ஏற்படும் என்ற அச்சம் மத்திய வங்கிக்கு காணப்பட்டது.

பங்குச்சந்தையும், பங்குச்சந்தையின் அலுவலக நாட்களான, போயா, விடுமுறை தினங்கள் தவிர்ந்த நாட்களான கடந்த ஜூலை 17ஆம் திகதி தொடக்கம் ஜூலை 24ஆம் திகதி வரையான ஏழு நாட்களில் வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார். (மு-11)

## அரசியல் தீர்வு கிடை...

என பிரித்தானிய மக்கள் பிரதிநிதிகளிடம், வடக்கு மக்கள் பிரதிநிதிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவினருக்கும் வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண முதலமைச்சர் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்று வடக்கு-கிழக்கு மாகாணங்களை மீள கட்டியெழுப்புவது தொடர்பாக இரு பகுதியினரிடையேயும் கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய இராச்சியத்தில் முன்னைய காலத்தில் ஏற்பட்ட நாடுகளுக்கு இடையேயான நல்லிணக்கம் தொடர்பாக தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டில் எட்டப்பட்ட தீர்வுகள் தொடர்பாக பிரித்தானிய பிரதிநிதிகள் வட மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு தெளிவு படுத்தியிருந்தனர்.

தமிழ் மக்களுக்கான சுயாட்சியை கொண்டு வருவதற்கு பிரித்தானியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசியல் தீர்வினை பெற்றுத்தரும் பொறுப்பு உள்ளது எனவும் தெரிவித்த வடக்கு மக்கள் பிரதிநிதிகள், இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை, காணாமல் போனவர்கள் குறித்து சரியான பதில் வழங்கப்படவில்லை, சரணடைந்தவர்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை, நிலவிடுவிப்பு முழுமையாக இடம்பெறவில்லை, அரசியல் கைதிகள் விடுதலை நடைபெறவில்லை, இவ்வாறான விடயங்கள் எவையும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் நல்லிணக்கம் பற்றி பேச முடியாது.

அரசியல்தீர்வும் போர்க்குற்றங்களுக்கு நீதியும் கிடைத்தால் மட்டுமே தேசிய நல்லிணக்கம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அவர்களுடைய கருத்துக்களை பெற்றுக் கொண்ட பிரித்தானிய பிரதிநிதிகள், தமது அனுபவங்களையும் வடக்கு மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் அரசிடம் பகிர்ந்து கொண்டு அரசியல் தீர்வுக்குதம்மால் உதவ முடியும் என்றும் தமது நாட்டுக்கு எவ்வாறு நல்லிணக்கத்தினை கொண்டு வந்தார்களோ அதே போன்ற சிபார்சுகளை இலங்கைக்கும் வழங்குவார்கள் என தெரிவித்தார்கள்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பேருந்தில் ஹற்றன்...



றில் பயணம் செய்து, ஹற்றன் நகருக்கு சென்றார்.

பேருந்து பயணத்தில் இணைந்த ரணில், பஸ் டிக்கெட் பெற்று பயணத்தை தொடர்ந்துள்ளார்.

பேருந்தில் பயணித்த சந்தர்ப்பத்தில் பிரதமருடன் அதிகாரிகள் சிலரும் இணைந்துள்ளனர்.

இதன்போது எடுக்கப்பட்ட சில புகைப் படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் பிரதமர் ஒருவர் பயணிகள் பேருந்தில் பயணித்த சந்தர்ப்பமாக இது கருதப்படுகிறது. (மு)

## அநீதியாக எதையும்...

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வு நேற்றைய தினம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது கலை, கலாசாரம், பண்பாடு இவற்றை வளர்க்கவும் பாதுகாக்க வேண்டியதும் எமது கடமை. நாம் உலகில் எந்த பகுதியில் இருந்தாலும் தமிழர் என்ற வகையில் நாம் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். எமக்குள் எந்த வித்தியாசமும் இல்லை. பாரம்பரிய பொக்கிஷத்துக்கு உரித்தானவர்கள். அதை வளர்க்க வேண்டியதும் பாதுகாக்க வேண்டியதும் எமது கடமை.

நாம் தமிழர். எமது கலை, கலாசாரம் பண்பாடு என்பவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் தமிழர் என்ற அடிப்படையில் பல நாடுகளில் இருந்து இங்கு ஒன்று கூடியுள்ளோம். அதில் நாம் பெருமையடைகிறோம்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பல்வேறு கஷ்டத்துடன் வாழ்கிறார்கள். பலர் நாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாக தமது சொந்த வதிவிடத்தில் வாழ முடியாமல் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார்கள். எமது நாட்டில் இருந்த 50 வீதமான தமிழர்கள் தற்போது இங்கு வாழவில்லை. 15 இலட்சமானவர்கள் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது எமது நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய பாதையில் செல்வதற்கு முயற்சித்து வருகிறோம். அந்த வகையில் புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் நாட்டில் சமத்துவம் சமாதானத்தை உருவாக்க வேண்டும். அது கை கூட வேண்டும். அது வெற்றி பெற வேண்டும். எனவே எம் அனைவருக்கும் அதில் தமிழன் என்ற வகையில் பங்குள்ளது.

இலங்கையில் வாழும் தமிழன் தலைமை நிமிர்ந்து சம அந்தஸ்துடன் சுயமரியாதையுடன் வாழக்கூடிய வகையில் அந்த அரசியல் சாசனத்தை அடைய வேண்டிய கடமை எமக்கு உண்டு. நாங்கள் அநீதியாக எதையும் கேட்க கூடாது. ஆனால் நீதியின் அடிப்படையில் உரிமை அடிப்படையில் பெறவேண்டியவற்றை பெறவேண்டும். அதற்கு அனைவரும் உதவ வேண்டும்.

30 வருடமாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக பல கஷ்டத்தின் மத்தியில் வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்தவர்கள் உதவ வேண்டும். பலர் உறவுகளை இழந்து அநாதைகளாக இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவ வேண்டியது எமது கடமை. எம்மால் இயன்றதை செய்ய வேண்டும். எமது இனம் உலகில் பக்குவமான இடத்தை பெற்றுள்ளது. அதை பாதுகாக்க வேண்டும். எனமேலும் தெரிவித்தார். (மு-9)

காணி விற்பனைக்கு
தெல்லிப்பளையில் வீட்டுடன் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (C-9270)
தொடர்பு: 0715961911

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499
VISA
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்
■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571

வீடு வாடகைக்கு
யாழ். வைத்தியசாலை, புகையிரத நிலையம், பஸ்நிலையம் போன்ற இடங்களை அண்மித்ததாக அமைந்த வீடுவாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777110281 (041)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
• [illegible]
• [illegible]
• [illegible]
UK - 550/= (C-9206)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை
(C-9262)
365 நாட்களும்
72 மணி நேரத்தில்
(Express Service)
(Door to Door Service)
DHL aramex FedEx
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
[illegible]
Call 021 222 3536

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org